## 5 மதிப்பெண் வினா

1. வணிகத்தின் பல்வேறு தடைகளை **கூறுக**
    - ஆள்சார் தடை
    - இடத்தடை
    - காலத்தடை
    - இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்க தடை
    - நட்ட இடர்பாட்டு தடை
    - அறிவுசார் தடை
    - பண்டமாற்று தடை
    - நிதி தடை
    - பொருட்களை துல்லியமாக தயாரிப்பதில் தடை
    - பொருட்களை உற்பத்தி செய்கின்ற இடத்திலிருந்து நேரடியாக வீட்டிற்க்கு கொண்டு செல்லுதல்
2. வணிகத்தின் **ஏதேனும் 5 தடைகளை** **விளக்குக**

**ஆள்சார்தடை**

- நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் நேரடி தொடர்பு இல்லாமல் இருப்பது ஆள்சார் தடை
- வியாபாரம் ஆள்சார் தடையை நீக்குகிறது

**இடத்தடை**

- நுகர்வு செய்யப்படும் இடத்திற்க்கும் உற்பத்தி செய்யப்படும் இடத்திற்க்கும் இடையே ஏற்படும் இடைவெளி இடத்தடை ஆகும்
- இடத்தடையை போக்குவரத்து நீக்குகிறது

**காலத்தடை**

- நுகர்வு காலத்திற்க்கும் உற்பத்திகாலத்திற்க்கும் இடையே உள்ள இடைவெளி காலத்தடை ஆகும்
- பண்டகக்காப்பு காலத்தடையை நீக்குகிறது

**இடர்பாட்டுத்தடை**

- போக்குவரத்து, பண்டககாப்பகம், போன்றவற்றின் போது ஏற்படும் தடைகள் இடர்பாட்டு தடை ஆகும்

- காப்பீடு இடர்பாட்டு தடையை நீக்குகிறது

**அறிவுசார் தடை**

- நுகர்வோருக்கு சந்தை நிலவரங்கள், பொருட்கள் பற்றிய விவரங்கள் அறிய இயலாத நிலைக்கு அறிவுச்சார் தடை எனப்படும்
- விளம்பரம் அறிவுச்சார் தடையை நீக்குகிறது

**3.** வட இந்தியாவில் வணிகம் மற்றும் வணிபத்தின் வளர்ச்சியை விவரி?

- அரசியல் மாற்றங்களுக்கிடையே 12ஆம் ஆண்டு முதல் 16 ஆண்டு வரை இந்தியா செல்வ செழிப்புடன் விளங்கியது
- **பால்பன்**
    - முதன் முதலாக சுல்தானக இருந்த போது அடர்ந்த வனப்பகுதிகளில் பாதை உருவாக்கி வியாபாரம் செய்ய வழிவகுத்தார்
- **அலாவுதின் கில்ஜி**
    1. பொருட்களின் விலைகளை குறைத்து வியாபார வளர்ச்சிக்கு வழிவகுத்தார்
    2. வெளிநாட்டு பொருட்களுக்கு மானியம் வழங்கி இறக்குமதியை ஊக்குவித்தார்
- **அரேபியர்கள்**
    - வெளிநாட்டு வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்தியவர்கள்
    - இந்திய வர்த்தகர்களை வேறுபடுத்தாதவர்கள்
- **வர்த்தக ஆதிக்கம்**
    - கடலோர வர்த்த்கம் மார்வாடிகள் மற்றும் குஜராத்திகள் வசம்
    - மத்திய மற்றும் மேற்கு ஆசிய நிலப்பகுதி வர்த்தகம்
        1. இந்துக்களில் **முல்கானியர்**
        2. ஆப்கானியர் மற்றும் ஈரானியர்களில் **குர்சானியர்**
- **முரிஷ் பயணி**
    - கங்கை சமவெளி, மால்வார், குஜராத் மற்றும் தென் இந்தியாவில் உள்ள பெரிய நகரங்களில் நடைபெற்றுள்ள சந்தையினை விவரித்துள்ளார்

- **வர்த்தக மையங்கள்**
  1. டெல்லி
  2. பம்பாய்
  3. அகமதாபாத்
  4. சோனார்
  5. சோனார் கூன்
  6. ஜான்பூர்
  7. லாகூர்
- **இந்தியா இறக்குமதி நாடுகள்**
  1. காபூல்
  2. அரேபியா
  3. ஐரோப்பா
  4. மேற்கு ஆசியா
  5. சீனா
- **இந்தியா இறக்குமதி பொருட்கள்**
  1. குதிரை
  2. உலர்பழங்கள்
  3. விலையுயர்ந்த கற்கள்
  4. கண்ண்டாடி பொருட்கள்
  5. உயர்தர ஜவுளி
  6. கச்சாப்பட்டு
  7. பவள பாறைகள்
  8. வாசனை எண்ணெய்
  9. வெல்வெல்
- **இந்தியா ஏற்றுமதி நாடுகள்**
  1. கிழக்கு ஆப்பிரிக்கா
  2. மலாயா
  3. சீனா
  4. ஆப்கானிஸ்தான்
  5. மத்திய ஆசியா
  6. பெர்சியா

3. பண்டையத் தமிழ்நாட்டின் கடற்கரையோர வர்த்தகம் பற்றி விளக்குக

**பண்டைய தமிழ்நாட்டில் கடற்கரையோர வர்த்தகம்**

- பூம்புகார் ,மருவூர்பாக்கம்(உள்நாட்டு நகரம்), பட்டினிப்பாக்கம்(கடலோர நகரம்) ஆகியவை உணவுப்பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் வியாபாரம் செய்யக்கூடிய இடங்களில் அங்காடிகளையும், பெரு வியாபாரிகளையும் கொண்டிருந்தன
- **ஏற்றுமதி மற்றும் இறக்குமதி இடங்கள்**
  1. தொண்டி
  2. கொற்கை
  3. பூம்புகார்
  4. முசிறி

- **பாண்டியர்கள் பங்கு**
  1. முத்துகள், பவளங்கள், மீன்பிடித்தல்
  2. உப்பு உற்பத்தி
  3. கப்பல் கட்டுதல்

- **உள்நாட்டு வியாபாரத்திற்கு பயன்படுத்திய பொருட்கள்**
  1. சிறிய படகு
  2. திமிலா
  3. தோணி
  4. அம்பு
  5. ஓடம்புனை
  6. கட்டுமரம்

- **வெளிநாட்டு வியாபாரத்திற்கு பயன்படுத்திய பொருட்கள்**
  1. பேரளவு கலம்
  2. மரக்கலம் வங்கம்
  3. நாவாய்

4. பண்டிய தமிழ்நாட்டின் வெளிநாட்டு வர்த்தகத்தின் பங்களிப்பை பற்றி விளக்குக

- **யாவணர்கள்**
  - வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டவர்கள் யாவணர்கள் ஆவார்
- **ஜானகர்**
  - தமிழர்களுடன் வர்த்தகம் செய்த அரேபியர்கள் ஜானகர் ஆவர்
- **பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டுள்ளவை**
  - காவிரிப்பூம்பட்டினம் என்ற நகரம் அரசின் உதவியோடு பல்வேறு மொழிகள் பேசும் நவநாகரிமுள்ள வெளிநாட்டினர் ஒன்றுக்கூடும் இடம்
- **அரசின் உதவி**
  - அடர்ந்த காட்டுப்பகுதியில் சாலை அமைக்கப்பட்டிருந்தது
  - தரைவழி நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன
  - துறைமுகங்கள், கலங்கறை விளக்கம், பண்டகக்காப்பகங்கள் என ஊக்குவிப்பு நடவடிக்கைகள்
- **சோழர் காலம்**

  **முக்கிய துறைமுகம் - காவிரிப் பூம்பட்டினம்**

  **சிறிய துறைமுகம்**

  1. நாகப்பட்டினம்
  2. மரக்காணம்
  3. அரிக்க மேடு

- **பாண்டியர் காலம்**

  கொற்கை, சாலியூர், காயல்பட்டினம், மருங்காவூர்பட்டினம் மற்றும் குமரி ஆகிய இடங்கள் சிறப்பிடம் பெறுகின்றன

- **சுங்க வரி**

  நெடுஞ்சாலைகள், துறைமுகங்களில் சோதனை சாவடிகளில் அமைத்து சுங்க வரி வசூலிக்கப்பட்டன

5. தொழில் , சிறப்புத் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு - ஓர் ஒப்பிடு செய்க

| அடிப்படை | தொழில் | சிறப்பு தொழில் | வேலைவாய்ப்பு |
|---|---|---|---|
| பணியின் தன்மை | சரக்கு மற்றும் சேவையை மக்களுக்கு அளிப்பது | சிறப்பு தேர்ச்சி பெற்ற சேவையை அளித்தல் | பணியாளருக்கு வழங்கிய செயலை செய்தல் |
| குறைந்த பட்ச தகுதி | ஏதும் இல்லை | குறிப்பிட்ட பிரிவில் சிறப்பு தகுதி/ பயிற்ச்சி பெறுதல் | ஏதும் இல்லை |
| அடிப்படை நோக்கம் | இலாபம் ஈட்டுதல் | சேவை புரிதல் | உரிமையாளரின் செயலை செய்து சம்பளம்/ கூலி பெறுதல் |
| மூலதனம் | நிறுவனத்தின் அளவை பொறுத்து மாறுபடும் | உருவாக்க வரையறுக்கப்பட்ட நிதி | ஏதும் இல்லை |
| வெகுமதி | இலாபம் | தொழில் முறைகட்டணம் | கூலி/சம்பளம் |
| இடர் | உறுதியற்றது | கட்டணம் நிச்சயமானது மற்றும் நிலையானது | ஏதும் இல்லை |

6. பொருளாதாரச் செயல்பாடுகளும் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகளும் உள்ள வேறுபாடுகாளை விவரி

| | பொருளாதார செயல்பாடுகள் | பொருளாதார சார்பற்ற செயல்பாடுகள் |
|---|---|---|
| பொருள் | இலாபம் ஈட்டுவதற்காக மெற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் பொருளாதார | சமூக மற்றும் உளவியல் தேவைகளை பூர்த்தி செய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கைகள் ஆகும் | |
| அளவீடு | பணத்தின் அடிப்படையில் | பணத்தின் அடிப்படையில் அளவிட முடியாது |
| உறவு | செல்வத்தை உருவாக்குவதுடன் தொடர்புடையவை | செல்வத்தை உருவாக்குவதில்லை |
| கால அளவு | திரும்ப திரும்ப நிகழும் தன்மை உடையவை | தொடர்ந்து நிகழாது |
| நோக்கம் | இலாபம் ஈட்டுவது | இலாப நோக்கம் இல்லை |

7. உற்பத்தித் தொழில் வணிகம் மற்றும் வியாபாரம் ஓர் ஒப்பிடு செய்க

| | உற்பத்தித் தொழில் | வணிகம் | வியாபாரம் |
|---|---|---|---|
| பொருள் | பிரித்து எடுத்தல், மறு உற்பத்தி, மாற்றுதல் போன்ற செயல்களை உள்ள்டக்கியது | பொருட்கள் சேவைகள் வழங்குதலை குறிக்கிறது | பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்முதல் மற்றும் விற்பனையை குறிக்கிறது |
| முதல் | அதிக அளவில் முதலீடு தேவை | குறைந்த அளவு முதல் போதுமானது | வியாபாரத்தின் தன்மையை பொருத்து மாறுபடும் |
| இடர்பாடு | அதிகம் | குறைவான இடர்பாடு | குறைவான இடர்பாடு |
| பரிமாணம் - பொருட்கள் & சேவையில் | வழங்கல் பக்கத்தை பிரதிபலிக்கிறது | தேவை பக்கத்தை பிரதிபலிக்கிறது | தேவை பக்கத்தை பிரதிபலிக்கிறது |
| உருவாக்கும் ப்யன்பாடு | உருவ பயன்பாடு | இடப்பயன்பாடு | உடைமை ப்யன்பாடு |

8. தனியாள் வணிகத்தின் குறைபாடுகளை விவரி

1. நீடித்த வாழ்வு
   - தனி வணிகரை பாதிக்கும் எந்த நிகழ்வும் தனி வணிகத்தை பாதிக்கும்
   - எனவே தனி வணிகம் நீடித்த வாழ்வு கிடையாது
2. சிறு முதல்
   - ஒருவர் மட்டுமே உரியாளர் என்பதால் சிறிய அளவில் மட்டுமே முதலை திரட்ட முடியும்
   - கூட்டுபங்கு நிறுமங்களை போல் பேரளவு முதலை திரட்ட முடியாது
3. வரையாறா பொறுப்பு
   - தனி வணிகத்தில் தனி வணிகரின் பொறுப்பு வரையறா பொறுப்பு ஆகும்
   - வியாபார கடன்களுக்காக தனி வணிகரின் சொந்த சொத்துகளிருந்து கடனீந்தோருக்கு செலுத்த வேண்டும்
4. அவசர முடிவு
   - தனி வணிகரால் எடுக்கப்படும் அவசர முடிவு வியாபார நட்டத்திற்கு சில நேரங்களில் காரணமாகி விடும்
5. வரையறுக்கப்பட்ட மேலாண்மை திறன்
   - தனி வணிகத்தில் தனி வணிகரின் மேலாண்மை திறன் ஒரு குறிப்பிட்ட எல்லை வரை மட்டுமே

9. தனியாள் வணிகத்தின் நன்மைகளை விவரி

1. தனிநபர் உரிமையும் கட்டுப்பாடும்
   - தனியாள் வணிக அமைப்பில் உரிமையும் கட்டுப்பாடும் தனி நபர் வசமே உள்ளது
2. இரகசியம் காத்தல்
   - தன் வியாபார முடிவுகளை யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டியதில்லை
   - வியாபார கணக்குகளையும் மற்றும் தொழில் சார்ந்த உண்மைகளையும் பொதுமக்களுக்கு தெரிவிக்க வேண்டியது இல்லை
3. எளிமை
   - அமைப்பது எளிது
   - கலைப்பது எளிது
4. முதல்

- குறந்த அளவு முதல் போதுமானது
- கூட்டுபங்கு நிறுமங்களை போல் பேரளவு முதல் தேவை இல்லை

5. இரகசியம் காத்தல்
- தன் வியாபார முடிவுகளை யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டியதில்லை
- வியாபார கணக்குகளையும் மற்றும் தொழில் சார்ந்த உண்மைகளையும் பொதுமக்களுக்கு தெரிவிக்க வேண்டியது இல்லை

10. தனியாள் வணிகத்தின் பண்புகள் யாவை?

1. தனிநபர் உரிமையும் கட்டுப்பாடும்
- தனியாள் வணிக அமைப்பில் உரிமையும் கட்டுப்பாடும் தனி நபர் வசமே உள்ளது

2. இரகசியம் காத்தல்
- தன் வியாபார முடிவுகளை யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டியதில்லை
- வியாபார கணக்குகளையும் மற்றும் தொழில் சார்ந்த உண்மைகளையும் பொதுமக்களுக்கு தெரிவிக்க வேண்டியது இல்லை

3. வரையாறா பொறுப்பு
- தனி வணிகத்தில் தனி வணிகரின் பொறுப்பு வரையறா பொறுப்பு ஆகும்

4. எளிமை
- அமைப்பது எளிது
- கலைப்பது எளிது

5. முதல்
- குறைந்த அளவு முதல் போதுமானது
- கூட்டுபங்கு நிறுமங்களை போல் பேரளவு முதல் தேவை இல்லை

**11.** இந்து கூட்டுக் குடுப்பத்தில் ஒரு இளவரை கூட்டாளியாகச் சேர்க்கலாமா? ஏன்?

- இந்து கூட்டுக் குடுப்பத்தில் ஒரு இளவரை கூட்டாளியாகச் சேர்க்க முடியும் காரணம் இந்து கூட்டு குடும்ம வணிக உறுப்பினர்களுக்கான தகுதி பிறப்பின் அடிப்படையை கொண்டது
- மேலும் கூட்டு வாரிசுதாரர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது

12. கர்த்தாவின் உட்கிடை ஆணையுரிமை என்றால் என்ன?

- வியாபாரத்தின் நலனிற்காக ஒப்பந்தத்தில் ஈடுபடல் மற்றும் வியாபார காரணங்களுக்காக வியாபரா சொத்துகளை அடமானம் வைத்தல் போன்றவற்றை செய்யும் உட்கிடை அதிகாரம் கர்த்தாவிற்கு மட்டும் உண்டு

13. இந்து கூட்டுக் குடும்பத் தொழிலின் சிறப்பியல்புகள் ஏதேனும் ஐந்து விவரி

**மேலாண்மை** :

- இந்து கூட்டு குடும்ப வணிகத்தின் தலைமை உறுப்பினர் கர்த்தா ஆவார்
- கர்த்தாவால் மேலாண்மை செய்யப்படுகிறது

**பொறுப்பு**

- கர்த்தாவின் பொறுப்பு - வரையறா பொறுப்பு
- கூட்டு வாரிசுதாரின் பொறுப்பு - வரையறு பொறுப்பு

**இளவர்**

- இந்து கூட்டுக் குடுப்பத்தில் ஒரு இளவரை கூட்டாளியாகச் சேர்க்க முடியும் காரணம் இந்து கூட்டு குடும்ம வணிக உறுப்பினர்களுக்கான தகுதி பிறப்பின் அடிப்படையை கொண்டது

**உட்கிடை ஆணையுரிமை**

- வியாபாரத்தின் நலனிற்காக ஒப்பந்தத்தில் ஈடுபடல் மற்றும் வியாபார காரணங்களுக்காக வியாபரா சொத்துகளை அடமானம் வைத்தல் போன்றவற்றை செய்யும் உட்கிடை அதிகாரம் கர்த்தாவிற்கு மட்டும் உண்டு

**நீடித்த வாழ்வு**

- குடும்ப உறுப்பினர்களின் மரணம், நொடிப்பு நிலை, மனசமநிலை இழப்பு போன்றவை இந்து கூட்டு குடும்ப வணிகத்தை பாதிக்காது

**14. கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது?**

- கூட்டாண்மையின் பெயர்
- கூட்டாண்மையின் கால வரையறை
- நிறுவனம் மேற்கொண்டிருக்கும் தொழிலின் தன்மை
- கூட்டாளிகளின் முதல் தொகை
- கூட்டாளிகளின் எடுப்பு விவரம்
- இலாப நட்ட பகிர்வு விகிதம்
- முதல் மீது வட்டி
- கூட்டாளிகள் தரும் கடன், கடனுக்கான வட்டி விகிதம்
- கணக்கேடுகள் பராமரிப்பு, தணிக்கை விதிமுறைகள்
- கூட்டாளி விலகல், சேர்ப்பு குறித்த விதி முறைகள்

- கூட்டாண்மை கலைப்பு நடைமுறைகள்

15. கூட்டாண்மை கலைப்பின் வகைகளை விவரி

A. **கூட்டாளிகளின் உடன்பாட்டால்( பிரிவு 40)**

- அனைத்து கூட்டாளிகளின் சம்மதத்தின் அல்லது உடன்பாட்டல் கலைக்கப்படும்

B. **கட்டாய கலைப்பு( பிரிவு 41)**

- கூட்டாளிகள்/ கூட்டாளிகளின் நொடிப்பு நிலை,
- தொழில் சட்ட விரோதமாக இருக்கும் போது கட்டாய கலைப்பு நடைபெறும்

C. **சில நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால்(பிரிவு 42)**

**பின்வரும் நிகழ்ச்சிகள் நிகழ்வுறும் போது கூட்டாண்மை கலைக்கப்படும்**

- கூட்டாளி இறப்பு
- கூட்டாளி விலகல்
- கூட்டாண்மை காலம் முடிவடைந்தவுடன்
- ஒரு கூட்டாளி நொடிப்பு நிலை அடைந்து விட்டதாக நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கும் போது
- சில குறிப்பிட்ட தொழில்களை செய்ய மட்டுமே தொடங்கப்பட்டிருப்பின் அத்தொழில்கள் நிறைவு பெற்றவுடன்

D. **விருப்ப முறிக்கூட்டாணமை அறிவிக்கையால் கலைப்பு( பிரிவு 43)**

- நிறுமத்தை கலைக்குப்படி கூட்டாளி ஒருவர் பிற கூட்டாளிகளுக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தால் கூட்டாண்மை கலைக்கப்படும்

E. **நீதி மன்றத்தால் கலைப்பு( பிரிவு 44)**

- கூட்டாளியின் மன சமநிலை இழப்பு
- நிலையான திறமையின்மை
- உடன்பாட்டை தொடர்ந்து மீறுகை
- கூட்டாளி ஒருவரின் ஒழுக்கக் கேடு
- உரிமை மாற்றம்
- நீதி நேர்மை அடிப்படையில்

16. கூட்டாண்மைக் கலைப்பிற்கும், நிறுமக் கலைப்பிற்கும்உள்ள வேறுபாடுகள் ஏதேனும் மூன்றை விவரி

| **கூட்டாண்மை கலைப்பு** | **நிறுவன கலைப்பு** |
|---|---|
| கூட்டாளிகளின் உடன்பாடு முடிவுக்கு வருதல் | கூட்டாளிகளுக்கிடையே உறவு முடிந்து விடுதல் |

| | |
|---|---|
| தொழில் தொடர்ந்து நடைபெறும் | தொழில் முடிவுக்கு வந்து விடும் |
| உதாரணம் அ,ஆ,இ என்ற கூட்டாளிகளில் இ மட்டும் விலகல் | உதாரணம் அ,ஆ,இ என்ற கூட்டாளிகள் அனைவரும் தொழிலை நடத்த விருப்பம் இன்றி கலைந்து போக தீர்மானித்தல் |

17. **கூட்டாண்மையின் இயல்புகள் ஏதேனும் ஐந்தினை விளக்குக**

1) **உடன்பாட்டு உறவு**
   - உடன்பாட்டால் ஏற்படுகிறது
   - தகுதி உடையவர்கள் மட்டுமே சட்டப்படி கூட்டாளியாக இருக்க முடியும்
2) **பல நபர்கள்**
   - குறைந்த பட்ச உறுப்பினர் எண்ணிக்கை - 2
   - அதிக பட்சம் - வங்கித்தொழில் - 10; பிறத்தொழில்கள் - 20
3) **வணிகத்தன்மை**
   - சட்டப்பூர்வமாக நடத்தக்கூடிய வணிகம் அல்லது தொழிலை உடன்படிக்கையின் மூலம் ஏற்படுத்தப்படுகிறது
4) **இலாப பகிர்வு**
   - கூட்டாண்மையில் ஏற்படும் இலாபத்தை ஒப்புகொண்ட விகிதப்படி பகிந்து கொள்கின்றனர்
   - உடன்பாடு இல்லை எனில் சமமாக பகிர்ந்து கொள்வர்
5) **பரஸ்பர முகமை**
   - கூட்டாண்மையில் கூட்டாளிகளுக்கிடையான உறவு முதல்வர் மற்றும் முகவர் உறவு ஆகும்
   - ஒவ்வொரு கூட்டாளியும் உரிமையாளராகவும், அதே சமயத்தில் முகவராகவும் செயல்படுகின்றனர்

18. **கூட்டாண்மையின் நன்மைகள் ஏதேனும் ஐந்தினை விளக்குக**

1) **அமைத்தல் எளிது**
   - அமைப்பது எளிது
   - கூட்டாண்மையை துவங்க கூட்டாளிகளிடையே ஒரு உடன்பாடு போதுமானது

2) **பதிவு கட்டாயமில்லை**
   - ❖ பதிவு கட்டாயமில்லை
   - ❖ விருப்பத்தின் பேரில் பதிவு செய்யலாம்

3) **அதிக நிதி ஆதாரங்கள்**
   - ❖ ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் முதல் வழங்குவதால் தனிநபர் வணிகத்தை விட அதிக முதல் திரட்ட வாய்ப்பு உள்ளது

4) **இடர்பாட்டில் பங்கேற்பு**
   - ❖ கூட்டாண்மையின் நட்டங்களை அனைத்து கூட்டாளிகளும் பகிர்ந்து கொள்வதால் அந்நிறுவனம் தொடர்ந்து இயங்குகிறது

5) **எளிமையான கலைப்பு**
   - ❖ கூட்டாண்மையை கலைப்பது மிக எளிது
   - ❖ எவ்வித சட்டச்சிக்கலும் இல்லை

**19. கூட்டாண்மையின் குறைபாடுகள் ஏதேனும் ஐந்தினை விளக்குக**

1) **இணக்கமின்மை**
   - ❖ கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் மனக்கசப்பு, மோதல்கள் போன்றவை கூட்டாண்மையில் இணக்கமின்மையை ஏற்படுத்தும்

2) **சட்டப்பூர்வ நிலையின்மை/ சட்டத்தனித்தன்மையின்மை**
   - ❖ கூட்டாண்மைக்கு தனிப்பட்ட அங்கீகாரம் இல்லாததால் கூட்டாளிகளின் இறப்பு, நொடிப்பு நிலை போன்றவை கூட்டாண்மையை முடிவுக்கு கொண்டு வந்து விடும்

3) **குறைவான நிதி வளங்கள்**
   - ❖ அதிக முதல் திரட்டும் வாய்ப்பு குறைவு
   - ❖ கடன் வாங்கும் திறனும் குறைவு
   - ❖ எனவே பேரளவு தொழில்களுக்கு இது பொருந்தாது

4) **வரையறுக்கப்பட்ட இடர் ஏற்பு**
   - ❖ வரையறா பொறுப்பினால் இடர் ஏற்படும் தொழில்களை துவங்க விரும்புவதில்லை

5) **உட்கிடை ஆணையுரிமை அபாயம்**

- ❖ நேர்மையில்லாத அல்லது திறமையற்ற ஒரு கூட்டாளி தனது செயலின் மூலம் பிறர்க்கு உட்கிடை ஆணையுரிமையால் தீங்கு இழைக்க முடியும்

**20. கூட்டாணமையின் வகைகளை விவரி**

1) **விருப்பமுறிக் கூட்டாண்மை**
   - ❖ கூட்டாண்யின் காலத்தை குறிக்காமல் வியாபாரத்தை நடத்தி வருதல் ஆகும்
   - ❖ கூட்டாண்மையின் வாழ்வு கூட்டாளிகளின் விருப்பத்தை பொறுத்தது
2) **குறித்த கால கூட்டாண்மை**
   - ❖ கூட்டாண்மை குறிப்பிட்ட காலத்திற்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட வணிக செயலை செய்து முடிப்பதற்கோ நிறுவப்பட்டது ஆகும்
   - ❖ குறிப்பிட்ட காலம் அல்லது வணிக செயல் முடிவடைந்தவுடன் கூட்டாண்மை முடிவுக்கு வந்து விடும்
3) **குறிப்பிட்ட கூட்டாண்மை/இணை வினை**
   - ❖ ஒரு குறிப்பிட்ட தொழில் அல்லது செயலை செய்வதற்காக தற்காலிகமாக தொடங்கப்பட்ட அமைப்பு குறிபிட்ட கூட்டாண்மை அல்லது இணை விணை ஆகும்
   - ❖ குறிப்பிட்ட வேலை முடிந்தவுடன் கூட்டாண்மை முடிவுறும்
4) **வரையறு கூட்டாண்மை**
   - ❖ ஏதேனும் ஒரு கூட்டாளிகளின் பொறுப்பு வரையறா பொறுப்பு
   - ❖ பிற கூட்டாளிகளின் பொறுப்பு வரையறு பொறுப்பு
   - ❖ பொதுகூட்டாளி, வரையறு கூட்டாளி என இரு வகை கூட்டாளிகள்

**21. கூட்டாளிகளின் வகைகளை விவரி?**

1) **உழைக்கும் கூட்டாளி/பொதுக்கூட்டாளி/ மேலாண்மை கூட்டாளி/ பணிபுரியும் கூட்டாளி**
   - ❖ தொழிலில் முதலிடுவார்
   - ❖ மேலாண்மையில் பங்கேற்பார்

- இவர் பொறுப்பு வரையறா பொறுப்பு

2) **உறங்கும் கூட்டாளி/ உழையா கூட்டாளி**
- தொழிலில் முதலிடுவார்
- மேலாண்மையில் பங்கேற்கமாட்டார்
- இவர் பொறுப்பு வரையறா பொறுப்பு

3) **பெயரளவு கூட்டாளி/பாசாங்கு கூட்டாளி**
- தொழிலில் முதலிடமாட்டார்\
- மேலாண்மையில் பங்கேற்க மாட்டார்
- ஆனால் தன் பெயரை நிறுவனம் பயன்படுத்த அனுமதித்து நிறுவன நற்பெயரை உயர்த்த உதவுவார்
- நிறுவன கடன்களுக்கு வெளியாறை பொறுத்தவரை இவரும் பொறுப்பாகிறார்

4) **இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி**
- இலாபத்தில் மட்டும் பங்கேற்பார்
- நட்டத்தில் பங்கேற்க மாட்டார்
- இவர் பொறுப்பு வரையறா பொறுப்பு

5) **முரண் தடை கூட்டாளி**
- ஒரு தொழிலில் ஒருவர் உண்மையிலேயே கூட்டாளையாக இல்லாமல் இருந்து தன் நடத்தையின் மூலம் தானும் ஒரு கூட்டாளி என வெளிநபரை நம்ப வைப்பவர் முரண் தடை கூட்டாளி ஆவார்
- வெளிநபர்கள் இவரை நம்பி நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டால் அதனால் ஏற்படும் நட்டத்திற்கு இவரே பொறுப்பு

6) **உரிமைப்போலி கூட்டாளி**
- கூட்டாண்மையில் கூட்டாளி அல்லாத ஒருவரை கூட்டாளி என விவரிக்கப்படும் போது தான் அவ்வாறு கூட்டாளி அல்ல என மறுக்காத நபர் உரிமை போலி கூட்டாளி ஆவார்

7) **இரகசிய கூட்டாளி**
- பொதுமக்களுக்கு தெரியாத நிறுவன உறுப்பினர்

- ❖ இவர் பொறுப்பு வரையறா பொறுப்பு

8) **இளவர் கூட்டாளி**

- ❖ 18 வயதிற்கு குறைவானவர்
- ❖ நீதிமன்றத்தால் பாதுகாவலர் நியமிக்கப்பட்டிருந்தால் 21 வயதிற்கும் குறைவானவர்
- ❖ இவர் பொறுப்பு வரையறு பொறுப்பு

22. அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?

a) **பெயர் குறித்த உட்பிரிவு**

- ➢ நிறுமத்தின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும்
- ➢ தனி நிறுமம் எனில் பெயரின் முடிவில் தனி வரையறு என்றும்
- ➢ பொது நிறுமம் எனில் பெயரின் முடிவில் வரையறு என்றும் குறிப்பிடப்பட்டிருக்கும்

b) **இடம் குறித்த உட்பிரிவு**

- ➢ நிறுமத்தில் பதிவு அலுவலகம் எங்கு உள்ளது என்பதை பற்றி தெரிவிக்கிறது

c) **நோக்கம் குறித்த உட்பிரிவு**

- ➢ நிறுமத்தால் செயல்படுத்தக்கூடிய நோக்கங்கள் அனைத்தையும் குறிப்பிடப்பட்டிருக்கும்

d) **பொறுப்பு குறித்த உட்பிரிவு**

- ➢ நிறுமத்தின் உறுப்பினர்கள் குறித்த பொறுப்பினை குறிப்பிடப்பட்டிருக்கும்
- ➢ பொறுப்புறுதியால் வறையறுக்கப்பட்டது
- ➢ பங்குகளால் வரையறுக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கும்

e) **முதல் குறித்த உட்பிரிவு**

- ➢ நிறுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட முதல்,
- ➢ பங்கு முதல்
- ➢ பெயரளவு முதல் ஆகியவற்றை பற்றீ விவரிக்கும்

f) **அமைப்பு குறித்த உட்பிரிவு**

- ➢ பங்குதாரர்கள் தாங்கள் ஒன்றிணைந்து நிறுமமாக செயல்பட விரும்பும் தங்களின் விருப்பத்தை இப்பிரிவு வெளிப்படுத்துகிறது

23. செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?

- ❖ பங்குகள், பங்கு மூலதனம், பங்குகளின் வகைகள்
- ❖ பங்குநர்களின் உரிமைகள்
- ❖ பங்குகள், கடனீட்டு பத்திரங்களின் வெளியீடு தொடர்பான விதிகள்
- ❖ பங்குகள் மீதான அழைப்பு , பங்கு ஒதுக்கீடு தொடர்பான விதிகள்
- ❖ பங்கு ஒறுபிழப்பு, பங்கு மறுவெளியீடு தொடர்பான விதிகள்
- ❖ பங்கு மாற்றம், பங்கு வாரிசு உரிமை மாற்றம் தொடர்பான விதிகள்
- ❖ பங்கு முதல் மாற்றி அமைத்தல் தொடர்பான விதிகள்
- ❖ இயக்குநர்கள் நியமனம், தகுதிகள் , ஊதியம் தொடர்பான விதிகள்
- ❖ இயக்குநர்களின் கடன் வாங்கும் அளவு தொடர்பான விதிகள்
- ❖ இயக்குநர் அவை கூட்டம் தொடர்பான விதிகள்
- ❖ நிறும கலைப்பு தொடர்பான விதிகள்

24. பிடிப்பு, துணை நிறுமங்கள் பற்றி விளக்குக

✓ பிடிப்பு நிறுமம் என்பது மற்றொரு நிறுமத்தின்

1. பங்கு முதல் 50% அல்லது அதற்கு மேல்
2. பெரும்பாண்மை இயக்குநர்களை நியமிக்கும் அதிகாரம்
3. பெரும்பாண்மை இயக்குநர்களை நீக்கும் அதிகாரம் கொண்டுள்ள நிறுமம் ஆகும்

✓ துணை நிறுமம் என்பது பிடிப்பு நிறுமத்தால் கட்டுபடுத்த கூடிய நிறுமம் ஆகும் **உதாரணம்** ரஜினி வரையறு நிறுமம் கார்த்திக் வரையறு நிறுமத்தில் பங்கு முதலில் 50% ற்க்கும் அதிகமாக கொண்டிருந்தால் ரஜினி வரையறு நிறுமம் பிடிப்பு நிறுமம் ஆகும். கார்த்திக் வரையறு நிறுமம் துணை நிறுமம் ஆகும்

25. **தகவலறிக்கையின் உள்ளடகங்கள் ஏதேனும் பத்து கூறுக**

1) நிறுமத்தின் முதன்மை நோக்கங்கள்
2) பங்குகளின் வகைகள், அவற்றின் எண்ணிக்கை, அதன் உரிமைகள்
3) உறுப்பினர் இயக்குநர் தேர்விற்கு தேவையான தகுதி பங்குகள் பற்றிய விவரம்
4) இயக்குநர்கள், மேலாண்மை இயக்குநர்கள் மற்றும் செயலர்கள் ஆகியோரின் பெயர், முகவரி, மற்றும் தொழில் ஆகிய விவரங்கள்
5) பங்கு ஒதுக்கீட்டிற்கான குறைந்த அளவு பங்கெடுப்பு

6) இயக்குநர்களின் தகுதி பங்குகள் பற்றிய விவரம்
7) தொடக்க செலவுகளுக்கு எதிர்பார்க்கப்படும் தொகை
8) தணிக்கையாளரின் பெயர் மற்றும் முகவரி
9) காப்பு மற்றும் மிகைத்தொகையின் விபரம்
10) நிறும கூட்டங்களில் பங்குதாரர்களின் வாக்குரிமை பற்றிய விபரம்

**26.** கூட்டுறவின் கொள்கைகள் என்ன?(ஏதேனும் 5)

1. **தன்னார்வ மற்றும் உறுப்பினர் ஆவதற்கு தடையில்லா வாய்ப்பு**
2. **மேலாண்மை**
   - மக்களாட்சி முறையில் மேலாண்மை செய்யப்படுகிறது
3. **தன்னாட்சி**:
   - கூட்டுறவு நிறுவனங்கள் தங்கள் உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப்படும் தன்னார்வ சுய உதவி அமைப்புகள் ஆகும்
4. **உறுப்பினர்களின் பொருளாதார பங்களிப்பு**
   - உறுப்பினர்கள் கூட்டுறவு மூலதனத்தை சம்மாக ஜனநாயக முறையில் பங்களித்து கட்டுப்படுத்துகின்றனர்
5. **கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு**
   - கூட்டுறவு உறுப்பினர்கள் தங்கள் உறுப்பினர்களை மிக திறமையாகவும், உள்ளூர், தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச கூட்டமைப்புகள் மூலம் இணைந்து செயல்படுகின்றன

**27.** கூட்டுறவுச் சங்கத்தின் நன்மைகள் யாவை?

1. தன்னார்வு நிறுமம்
2. எளிமையான தோற்றுவிப்பு
3. மக்களாட்சி முறையில் மேலாண்மை
4. சமத்துவ அடிப்படையில் இலாபத்தை பகிர்தல்
5. வரையறு பொறுப்பு
6. சட்ட தனித்தன்மை
7. பொதுநலன்
8. சிறப்பான நிர்வாகம்
9. அரசின் ஆதரவு
10. இடைநிலையர்களை தவிர்த்தல்
11. வரிச்சலுகை

12. ஊரக கடன் வழங்கல்

**28.** கூட்டுறவுச் சங்கத்தின் நன்மைகள் ஏதேனும் ஐந்தினை விளக்குக

1. **தன்னார்வு நிறுமம்**
   - பொதுவான நோக்கமுள்ள எவரும் உறுப்பினர் ஆகலாம்
   - உறுப்பினர் எவரும் சங்கத்தை விட்டு எப்போதும் வெளியேறலாம்
2. **எளிமையான தோற்றுவிப்பு**
   - குறைந்த பட்ச உறுப்பினர் எண்ணிக்கை 25
   - சங்கத்தை ஆரம்பிக்க சட்ட சடங்குகள் அதிகம் இல்லை
3. **மக்களாட்சி முறையில் மேலாண்மை**
   - ஒரு நபர் ஒரு வாக்கு என்ற கோட்பாடு அடிப்படையில் மக்களாட்சி முறையில் மேலாண்மை செய்யப்படுகிறது
4. **வரையறு பொறுப்பு**
   - உறுப்பினர்களின் பொறுப்பு வரையறு பொறுப்பு ஆகும்
   - கூட்டுறவு நிறுவன கடன்களுக்காக உறுப்பினர்களின் சொந்த சொத்துகளை ஈடுபடுத்த முடியாது
5. **வரிச்சலுகை**
   - அரசு கூட்டுறவு சங்கங்களை ஊக்குவிக்க பலவகை வரிச்சலுகைகளை வழங்கி வருகின்றது

**29.** கூட்டுறவுச் சங்கத்தின் வகைகளைக் கூறுக

1. நுகர்வோர் கூட்டுறவு
2. உற்பத்தியாளர் கூட்டுறவு
3. சந்தைபடுத்துதல் கூட்டுறவு
4. கடன் கூட்டுறவு
5. வீட்டு வசதி கூட்டுறவு
6. உழவர் கூட்டுறவு
7. தொழில்துறை கூட்டுறவு

**30.** கூட்டுறவுச் சங்கத்தின் வகைகள் ஏதேனும் ஐந்தினை விளக்குக

1. **நுகர்வோர் கூட்டுறவு**

- நுகர்வோர்களால் ஆரம்பிக்கப்படுகிறது
- மக்களுக்கு தரமான பொருட்களை சிறந்த விலையில் வழங்குவது இதன் முக்கிய நோக்கம்

2. **உற்பத்தியாளர் கூட்டுறவு**

- உற்பத்தியாளரால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுகிறது
- இவ்வகை உற்பத்தி சங்கங்கள் செலவை குறைத்து உற்பத்தி செய்யப்பட்ட பொருளை மையமாக திரட்டி ஒட்டுமொத்தமாக சந்தையிடுகின்றன
- உதாரணம் கூட்டுறவு நெசவாளர் சங்கம், கூட்டுறவு தீப்பெட்டி தயாரிப்பாளர் சங்கம் போன்றவை

3. **சந்தைபடுத்துதல் கூட்டுறவு**

- உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை மொத்தமாக திரட்டி அவைகளை சந்தையிடும் நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட சங்கம் ஆகும்

4. **வீட்டு வசதி கூட்டுறவு**

- உறுப்பினர்களுக்கு சொந்தமாகவோ அல்லது வாடகைக்கோ வீடுகளை பெற்று தரும் சங்கங்கள் வீட்டு வசதி கூட்டுறவு சங்கங்கள் ஆகும்
- சொந்தமாக வீடு கட்ட விழையும் அன்பர்கள் அனைவரும் ஒன்று திரண்டு வீடு கட்ட கூட்டுறவு சங்களை நிறுவுகின்றனர்
- கடன் தொகைகளை வட்டியுடன் சுலப தவணைகளில் திரும்ப பெறுகிறது'

5. **தொழில்துறை கூட்டுறவு**

- சிறுதொழில் செய்யும் உற்பத்தியாளர்களால் நடத்தப்படுகிறது
- கூட்டுறவு முறையில் சிறு தொழில் மற்றும் குடிசை தொழில் அமைக்க இச்சங்கம் மிகுந்த உதவி புரிகின்றது
- உற்பத்தி பொருட்களின் தரத்தை உயர்த்தும் மூலப்பொருட்களை பெற இச்சங்கங்கள் மிகுந்த உதவி புரிகின்றன

31. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக

1. இச்சங்கம் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள நுகர்வோரால்ஆரம்பிக்கப்படுகிறது
2. இடைநிலையர்களை தவிர்க்கிறது
3. மொத்த கொள்முதல் செய்வதன் மூலம் உறுப்பினர்களுக்கும், உறுப்பினரல்லாதவர்களுக்கும் நியமான விலையில் பொருட்களை விற்பனை செய்கிறது
4. அத்தியாவசியமான பொருட்கள் கிடைக்க வழிவகை செய்கிறது

**32.** அரசு நிறுமங்களின் சிறப்பியல்புகள் யாவை?(ஏதேனும் ஐந்து மட்டும்)

- **நிறும சட்டத்தின் கீழ் பதிவு**
  - ✓ இந்திய நிறும சட்டம் 2013 மற்றும் அதற்கு முந்தைய சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகிறது
- **நீடித்த வாழ்வு**
  - ✓ அரசிடமிருந்து தனி சட்ட தனித்தன்மை உடையது
  - ✓ நிறுமத்தின் பெயரால் சொத்துகள் வாங்குதல், விற்றல், வழக்கு தொடுத்தல், வழக்காடுதல் போன்றவற்றை மேற்கொள்ள முடியும்
- **மூலதனம்**
  - ✓ நிறுமத்திற்க்கு தேவையான 51% அதிகமான பங்கு முதலை அரசு வழங்குகிறது
- **பெரும்பான்மை இயக்குநர்கள்**
  - ✓ நிறுமத்தில் பெரும்பான்மையான இயக்குநர்களை அரசு நியமனம் செய்கிறது
- **பாராளுமன்றம்/ சட்ட மன்றத்திற்கு பொறுப்பு**
  - ✓ பாராளுமன்றம்/ சட்ட மன்றத்தில் நிறுமத்தின் ஆண்டறிக்கை சமர்பிக்கப்படுகிறது

**33.** துறைவாரி நிறுமத்தின் சிறப்பியல்புகள் யாவை?

1. **பொறுப்புகள்**
   - துறையின் அமைச்சகத்துடன் நேரடி தொடர்புடையது
   - அதிகாரம் துறை அமைச்சரிடமிருந்து கீழ் நோக்கி செல்கிறது
2. **அரசின் நிதியுதவி**
   - நிறுவனங்களுக்கு தேவையான நிதியை அரசே வழங்குகிறது

3. **கணக்கியலும் தணிக்கையும்**
   - துறைவாரி நிறுவனங்கள் சாதாரண வரவு செலவு திட்டமிடல், கணக்கியல் மற்றும் தணிக்கை நடைமுறைகள் அரசின்அனைத்து துறைகளுக்கும் பொருந்தும்
4. **மேலாண்மை**
   - அரசு அலுவலர்களால் மேலாண்மை செய்யப்படுகிறது
5. **சட்ட விலக்களிப்பு**
   - அரசின் ஒப்புதலின்றி நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு தொடுக்க இயலாது

**34.** துறைவாரி நிறுவனங்களின் நன்மைகள் மற்றும் குறைகளை விவரி

I. **நன்மைகள்**
   - ✓ எளிமையான கலைப்பு
   - ✓ பாராளுமன்றம்/ சட்ட மன்றத்தின் நேரடி கட்டுப்பாடு
   - ✓ இரகசியம் காத்தல்
   - ✓ பொதுமக்களுக்கு வரி சுமை குறைதல்
   - ✓ சமூக மாற்றத்திற்கான கருவி
   - ✓ பொதுமக்களின் நிதியை தவறாக பயன்படுத்தலினால் ஏற்படும் இடர் குறைவு
   - ✓ அமைச்சகத்தின் விதிகள் மற்றும் செயல்பாடுகள் முறையாக பின்பற்றப்படும்

II. **குறைபாடுகள்**
   - ✓ தாமதம், சிகப்பு நாட போக்கு
   - ✓ நிறுவன நட்டத்தினால் ஏற்படும் கூடுதல் வரிச்சுமை
   - ✓ போட்டியின்மை
   - ✓ பணியில் சராசரி அணுகுமுறை
   - ✓ அரசின் தலையீடு அதிகம்
   - ✓ மேலாண்மை திறமை குறைவு
   - ✓ நிதிக்கு அரசை சார்ந்திருத்தல்

**35.** பொதுக் கழகத்தின் நன்மைகள் மற்றும் தீமைகளை விவரி.

a. **நன்மைகள்**
- ✓ தன்னாட்சி உரிமை
- ✓ சட்ட அமைப்புகள் மூலம் கட்டுப்பாடு
- ✓ தகுதி மற்றும் திறைமையான அலுவலர்கள்
- ✓ அரசின் தலையீடு இன்மை
- ✓ குறைந்த அளவிலான சுரண்டலுக்கே வாய்ப்பு
- ✓ தகுந்த விலைக்கொள்கை

b. **குறைபாடுகள்**
- ✓ தன்னாட்சி மற்றும் நெகிழ்வு தன்மை
- ✓ சர்வாதீன அதிகாரத்தை தவறாக பயன்படுத்துதல்
- ✓ நெகிழ்வு தன்மையற்ற அரசியலமைப்பு
- ✓ குறைவான மேலாண்மை திரன்
- ✓ சிறப்பு சட்டம் இயற்றுவதில் சிக்கல்
- ✓ இயக்குநர் உறுப்பினர்களின் பல்வேறு குழுக்களிடையே உள்ள முரண்பாடுகள்

36. பொதுத்துறை / பொதுகழகம் நிறுவனங்களின் சிறப்பியல்புகள் யாவை? (ஏதேனும் ஐந்து மட்டும்)

- ➢ **தனித்தியங்கும் சட்ட தன்மை**
  - ✓ தனிச்சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்படுகிறது
  - ✓ அமைச்சகத்துடன் தொடர்புடையது
- ➢ **நீடித்த வாழ்வு**
- ➢ பொது முத்திரையுடன் நீடித்தல் நிலைத்தன்மையுடன் தனித்தன்மையுடன் சட்டபூர்வமாக செயல்படும்
- ➢ **அரசின் முதலீடு**
  - ✓ அரசே அனைத்து முதலையும் வழங்குகிறது
  - ✓ கூடுதல் மூலதனத்தை முதலீட்டு சந்தையிலிருந்தும் திரட்டுகிறது
- ➢ **இயக்குநரவையால் மேலாண்மை**
  - ✓ அரசின் பரிந்துறையின் பேரில் நியமனம் செய்யப்பட்ட இயக்குநரவை மூலம் மேலாண்மை செய்யப்படுகிறது
- ➢ **சேவை நோக்கம்**

- ✓ சேவையை நோக்கமாக கொண்டுள்ளது
- ✓ சுயசார்பு கொண்டு நியமான இலாபத்தை ஈட்டும் குறிக்கோள் கொண்டது

37. துறைவாரி நிறுவனங்களின் நன்மைகள் ஏதேனும் ஐந்தினை விளக்குக மற்றும் குறைகளை விவரி

**நன்மைகள்**

- **எளிமையயான அமைப்பு**
  - ❖ நிர்வாக முடிவெடுத்து அரசு அமைப்பது எளிய முறையாகும்
- **பாராளுமன்றம்/ சட்ட மன்றத்தின் நேரடி கட்டுப்பாடு**
  - ❖ பாராளுமன்றம்/ சட்ட மன்றத்தின் நேரடி கட்டுப்படுத்தப்படும்
  - ❖ இதற்கு துறை அமைச்சர் பொறுப்பாவார்
- **இரகசியம் காத்தல்**
  - ❖ பாதுகாப்பு , அணுசக்தி, இராணுவ ரகசியம் காத்தல் போன்ற தொழில்களுக்கு துறைவாரி அமைப்பு மிக சிறந்தது
- **பொதுமக்களுக்கு வரி சுமை குறைதல்**
  - ❖ இத்தொழில் நிறுவனங்கள் தங்களது வருமானத்தை அரசு கருவூலங்கள் மூலம் செலுத்தப்படுவதால் பொதுமக்களுக்கு குறைந்த வரியே விதிக்கப்படும்.
- **சமூக மாற்றத்திற்கான கருவி**
  - ❖ அரசாங்கம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த துறைவாரி நிறுவனங்களை கருவியாக பயன்படுத்துகின்றன

38. துறைவாரி நிறுவனங்களின் குறைபாடுகள் ஏதேனும் ஐந்தினை விளக்குக

- **தாமதம், சிகப்பு நாட போக்கு**

  இத்தொழில் நிறுவனங்கள் நெகிழ்வற்ற நடைமுறைகளையும், மரபுகளையும் பின்பற்றுவதால விரைந்து செயல்படுவதற்கு தடையாக உள்ளது
- **கூடுதல் வரிச்சுமை**

இத்தொழில் நிறுவனங்களில் ஏற்படும் நட்ட,ம் காரணமாக அதை ஈடுகட்டும் பொருட்டு அரசு பொதுமக்கள் மீது கூடுதல் வரி விதிக்கலாம்

- **போட்டியின்மை மற்றும் திறமையின்மை**
  இத்தொழில் நிறுவனங்கள் பெரும்பாலும் போட்டியற்ற சூழ்நிலையில் இயங்குவதால் திறமையை பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற பொருளாதார முனைப்போடு செயல்படுவதில்லை
- **பணியில் சராசரி அணுகுமுறை**
  அரசு அலுவலர்கள் தங்கள் பணியில் சராசரி அணுகுமுறை போன்றே இந்நிறுவன பணியிலும் செயல்படுகிறார்கள்
- **அரசின் தலையீடு அதிகம்**
  இந்நிறுவனங்களில் அரசு அளவுக்கு அதிகமான கட்டுபாடுகள், விதிகளை சுமத்துகிறது

39. பொதுக் கழகத்தின் நன்மைகள் ஏதேனும் ஐந்தினை விளக்குக

**நன்மைகள்**

- **தன்னாட்சி உரிமை**
  1. பொதுக்கழகம் தன்னாட்சியாக இயங்குகிறது
  2. அரசின் கட்டுப்பாடு குறைவு
- **சட்ட அமைப்புகள் மூலம் கட்டுப்பாடு**
  பாராளுமன்றம் அல்லது சட்டசபை அமைப்புகளின் குழுக் கட்டுப்பாடு மூலம் கட்டுப்புபடுத்துகிறது
- **தகுதி மற்றும் திறைமையான அலுவலர்கள்**
  1. பொதுக்கழகம் அதன் அலுவலர்கள்களுக்கு பணியில் நிறைவான தன்மை உள்ளது
  2. அதன் அலுவலர்கள் திறமை பெற்றவர்களாக உள்ளனர்
- **அரசின் தலையீடு இன்மை**
  1. அரசியல் தலையீடுகளால் பொதுக்கழகம் எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை
  2. அதன் கொள்கைகளும் சுரண்டல்களும் தொடர்ந்து செயல்படும்
- **தகுந்த விலைக்கொள்கை**

1. அடக்கம் - இலாபம் என்ற அடிப்படையில் பொதுக்கழகம் விலைக் கொள்கையை உருவாக்குகிறது

40. பொதுக் கழகத்தின் தீமைகள் ஏதேனும் ஐந்தினை விளக்குக

**குறைபாடுகள்**

- **தன்னாட்சி மற்றும் நெகிழ்வு தன்மை**
  1. தன்னாட்சி மற்றும் நெகிழ்வு தன்மை என்பது ஏட்டளவில் மட்டுமே உள்ளது
  2. அமைச்சர்கள், அரசியல்வாதிகள் மூலம் அதிகளவில் இடையூறு ஏற்படுகிறது
- **சர்வாதீன அதிகாரத்தை தவறாக பயன்படுத்துதல்**
  1. பொதுக்கழகம் அதன் சர்வாதீன அதிகாரத்தை தவறாக பயன்படுத்துகிறது
  2. நுகர்வோரிடமிருந்து சுரண்ட எவ்வித தயக்கமும் ஏற்படுவதில்லை
- **நெகிழ்வு தன்மையற்ற அரசியலமைப்பு**
  1. பொதுகழகத்தினை உருவாக்கும் அரசியல் சட்டப்பிரிவுகள் நெகிழ்ச்சி தன்மையற்றது
  2. எவ்விதத்திலும் மாறக்கூடியது அல்ல
- **குறைவான மேலாண்மை திறன்**

  பொதுகழகத்தின் அலுவலர்கள் குறைவான மேலாண்மை திறன் உடையவர்களாக அறியப்படுகிறார்கள்
- **சிறப்பு சட்டம் இயற்றுவதில் சிக்கல்**
  1. பொதுகழகங்களை சிறப்பு சட்டம் மூலம் மட்டுமே உருவாக்க முடியும்
  2. அதனை உருவாக்கும் நடைமுறைகள் சிக்கலானவை

41. இந்திய ரிசர்வ் வங்கியின் நிறுவனக் கட்டமைப்பு பற்றி விரிவாக விளக்குக.

1. மத்திய தலைமை அலுவகம் - மும்பை
2. மத்திய தலைமை அலுவகம் துறைகள் - 33
3. மண்டல அலுவலகம் - 4

- ➢ மும்பை
- ➢ தில்லி
- ➢ கொல்கத்தா
- ➢ சென்னை

4. மண்டல அலுவலகம் துணைநிலை ஆளுநரின் கீழ் செயல்படும்
5. 19 பிராந்திய அலுவகம், 11 துணை அலுவலகமும் செயல்படுகின்றன
6. மத்திய இயக்குநர்கள் வாரியத்தல் நிர்வகிக்கப்படுகிறது
7. வாரியத்தில் உள்ள 21 உறுப்பினர்களும் இந்திய அரசால் நியமிக்கப்படுகின்றனர்
8. இயக்குநரவையில் உள்ளவர்கள்

- ➢ ஒரு ஆளுநர் மற்றும் 4 துணை நிலை ஆளுநர் - பதவிகாலம் - 4 ஆண்டுகள்
- ➢ பல்வேறு துறைகளில் இருந்து 10 இயக்குநர்கள்
- ➢ இரண்டு அரசு அதிகாரிகள்
- ➢ 4 இயக்குநர்கள் ( வட்டார வாரியங்களில் இருந்து ஒவ்வொருவர்)

42. இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக.

**தலைமை மேற்பார்வை பணி**

- ➢ உலக நிதிநிறுவனங்களில் இந்தியாவைன் பிரதிநிதி
- ➢ இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்
- ➢ பணவியல் உச்ச நிலை அதிகாரி
- ➢ பொருளாதார அளவுருக்களை கூர்ந்து கண்காணித்தல்
- ➢ புதிய சவால்களுக்கு உடனடியாக பதிலளிப்பது

**பாரம்பரிய பணிகள்**

- ➢ அரசின் வங்கியர் மற்றும் நிதி ஆலோசகர்
- ➢ ரூபாய் நோட்டுகளை அச்சடித்து வெளியிடுவதில் முற்றுரிமை
- ➢ வங்கிகளின் வங்கியர்
- ➢ கடன் மற்றும் பணப்புழக்கத்தின் கட்டுப்பாட்டாளர்
- ➢ இறுதி நிலை கடன் ஈவோர்
- ➢ தீர்வக அமைப்பு சேவைகள்
- ➢ அந்நிய செலாவணி இருப்புகளின் பாதுகாவலர்
- ➢ அந்திய செலாவணி விகிதத்தின் பராமரிப்பு
- ➢ நம்பக தன்மை உள்ள தகவல்கள் சேகரிப்பு மற்றும் வெளியீடு

**மேம்பாட்டு பணிகள்**

- பொதுமக்களிடையே வங்கி பழக்கங்களை வளர்ப்பது
- குறை தீர்வு நடவடிக்கைகள்
- வேளாண்மை வளர்ச்சி
- சிறிய அளவிலான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்
- வெளிநாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துதல்
- கூட்டுறவு துறையினை ஆதரித்தல்

43. இந்திய ரிசர்வ் வங்கியின் **தலைமை மேற்பார்வை பணி**களை ஐந்தினை விளக்குக

**தலைமை மேற்பார்வை பணி**

- **உலக நிதிநிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி**

1. **சர்வதேச வங்கியில் தர நிலைகளுக்குகிணங்க நல்லிணக்கம் மற்றும் நிலைத்தன்மையை பராமரிப்பதற்காக இந்திய ரிசர்வ் வங்கியானது வங்கி மேற்பார்வை மீதான பாசல் குழுவுடன் இணைந்து 1997 ஆண்டு முதல் இணைந்து செயல்படுகிறது**

| |
|---|
| **The Basel Committee on Banking Supervision (BCBS)is a committee of banking supervisory authorities that was established by the central bank governors of the Group of Ten countries in 1974. It provides a forum for regular cooperation on banking supervisory matters. Its objective is to enhance understanding of key supervisory issues and improve the quality of banking supervision worldwide** |

2. **புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி (International Bank for Reconstruction and Development- IBRD) மற்றும்**

**சர்வதேச நாணய நிதியம்**( **International Monetary Fund** (**IMF**))
ஆகியவற்றில் இந்திய அரசின் பிரதிநிதியாக செயல்படுகிறது

- **இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்**
  இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934., மற்றும் வங்கி ஒழுங்குபடுத்துதல் சட்டம் 1949(BANKING REGULATION ACT, 1949) ஆகியவற்றின் கீழ் இந்திய வங்கிகளின் கட்டமைப்பினை ஒழுங்குப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளை செய்கிறது

> The Banking Regulation Act, 1949 is a legislation in India that regulates all banking firms in India. Passed as the Banking Companies Act 1949, it came into force from 16 March 1949 and changed to Banking Regulation Act 1949 from 1 March 1966. It is applicable in jammu and kashmir from 1956. Initially, the law was applicable only to banking companies. But, 1965 it was amended to make it applicable to cooperative banks and to introduce other changes

- **பணவியல் உச்ச நிலை அதிகாரி**
  1. விலைவாசி நிலைத்தன்மை, பணவீக்க போக்குகளை ஒழுங்குப்படுத்துதல்
  2. பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் நாட்டின் பணவியல் கொள்கையை இந்திய ரிசர்வ் வங்கி தீர்மானிக்கிறது
- **பொருளாதார அளவுருக்களை கூர்ந்து கண்காணித்தல்**
  பொருளாதார பரந்த அளவுருக்காளான விலைவாசி, வேலைவாய்ப்பு, செலுத்துதல் சமநிலை போன்றவைகளை கூர்ந்து கண்காணித்து பொருளாதார உறுதித்தன்மை மற்றும் வளர்ச்சியை அடைவதற்கு உதவுகிறது
- **புதிய சவால்களுக்கு உடனடியாக பதிலளிப்பது**

இந்திய ரிசர்வ் வங்கி சுற்றறிக்கைகள், வல்லுநர் குழு அறிக்கைகள் மூலம் புதிய சவால்களுக்கு உடனடியாக பதிலளிக்கிறது

44. இந்திய ரிசர்வ் வங்கியின் **பாரம்பரிய பணிகள் ஏதேனும்** ஐந்தினை விளக்குக

**பாரம்பரிய பணிகள்**

- **அரசின் வங்கியர் மற்றும் நிதி ஆலோசகர்**
  1. அரசின் சார்பாக பணம் பெறுதல் மற்றும் செலுத்தல் பணியை மேற்கொள்கிறது
  2. அரசுக்கு தேவையான அலோசனை வழங்கும் பணியினை மேற்கொள்கிறது
- **ரூபாய் நோட்டுகளை அச்சடித்து வெளியிடுவதில் முற்றுரிமை**

  ஒரு ரூபாய் மற்றும் நாணயங்களை வெளியிடுவதை தவிர பிற அனைத்து ரூபாய் நோட்டுகளை அச்சடித்து வெளியிடுவதில் முற்றுரிமை பெற்றுள்ளது
- **வங்கிகளின் வங்கியர்**
  1. இந்திய ரிசர்வ் வங்கி வங்கிகளின் வங்கியராக செயல்படுகிறது
  2. இந்திய ரிசர்வ் வங்கிக்கும் பிற வங்கிகளுக்கும் இடையே உள்ள உறவு கடனீந்தோர் கடனாளிகள் உறவு ஆகும்
- **கடன் மற்றும் பணப்புழக்கத்தின் கட்டுப்பாட்டாளர்**

  நாட்டின் கடன் பணம் மற்றும் ரூபாய் பணப்புழக்கத்தின் அளவை கட்டுப்படுத்துவது மற்றும் வட்டி விகிதத்தினை நிர்வாகம் செய்வது போன்றவைகள் மூலம் கடன் மற்றும் பணப்புழக்கத்தின் கட்டுப்பாட்டாளராக விளங்குகிறார்
- **இறுதி நிலை கடன் ஈவோர்**

  அவசர கால நேரங்களில் இந்தியாவில் எந்த ஒரு வங்கியும் நிதி உதவியை பெற இந்திய ரிசர்வ் வங்கியினை அணுகும் போது ரிசர்வ் வங்கி கடன்களை வழங்குகிறது

45. இந்திய ரிசர்வ் வங்கி கடன் அளவை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை விளக்குக

1) **வங்கி வீத கொள்கை**

❖ வங்கிவீதம் என்பது இந்திய ரிசர்வ் வங்கி அட்டவணையிடப்பட்ட வங்கிகளுக்கு மாற்றுச்சீட்டுகளை மறுவட்டம் செய்து கடன் வழங்கும் கழிவு விகிதத்தை குறிக்கும்

**அ) மறு வாங்கல் விகிதம்**

❖ ரிசர்வ் வங்கி அரசின் அல்லது பிற பிணையங்களை வணிக வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொண்டு கடன் வழங்கும் வட்டி விகிதம் மறு வாங்கல் விகிதம் ஆகும்

**ஆ) பின்னீட்டு மறு வாங்கல் விகிதம்**

❖ ரிசர்வ் வங்கி அரசு பிணையங்களை கொடுத்து வணிக வங்கிகளிடம் கடன் பெறும் வட்டி விகிதம் பின்னீட்டு மறு வாங்கல் விகிதம் ஆகும்

2) **ரொக்க இருப்பு வீதம்**

❖ அட்டவணையிடப்பட்ட வங்கிகள் தம்மிடமுள்ள மொத்த கால மற்றும் கேட்பு வைப்புகளின் விகிதாச்சாரமாக ரொக்க பணமாக இந்திய ரிசர்வ் வங்கியில் வைத்திருக்க வேண்டிய பண இருப்பு விகிதம் ரொக்க இருப்பு விகிதம் ஆகும்

3) **சட்டரீதியான நீர்மைத்தன்மை விகிதம்**

❖ அட்டவணையிடப்பட்ட வங்கிகள் தம்மிடமுள்ள மொத்த கால மற்றும் கேட்பு வைப்புகளின் விகிதாச்சாரமாக ரொக்க பணமாக தன்னிடமே வைத்திருக்க வேண்டிய பண இருப்பு விகிதம் ரொக்க இருப்பு விகிதம் ஆகும்

4) **திறந்த சந்தை செயல்பாடுகள்**

❖ நாட்டின் பண புழக்கத்தை அதிகரிக்க அல்லது குறைக்க இந்திய ரிசர்வ் வங்கி நேரடியாக பணச்சந்தையில்

பத்திரங்கள் மற்றும் மாற்றுச்சீட்டுகளை வாங்கவோ அல்லது விற்கவோ செய்கிறது

46. உரிமையாளர்கள் முறை அடிப்படையில் வங்கிகளை வகைப்படுத்துக

1. அரசு வங்கிகள் அல்லது பொதுத்துறை வங்கிகள்
   - பங்கு முதலில் 51% அதிகமாக ஒரு வங்கியில் அரசின் பங்கு இருந்தால் அவை அரசு வங்கியாகும்
   - உதாரணம் : SBI., IDBI
2. தனியார் துறை வங்கிகள்
   - தனி நபர்களுக்கு சொந்தமான அனைத்து வங்கி நிறுவனங்களும் தனியார் துறை வங்கிகள் ஆகும்
   - உதாரணம் - கரூர் வைஸ்சியா வங்கி., தி தமிழ்நாடு மெர்கெண்டைல் வங்கி, லட்சுமி விலாஸ் வங்கி
3. கூட்டுறவு வங்கிகள்
   - வைப்புகளை வைத்திருக்கும் ஒரு வங்கி, கடன்களைக் கொடுப்பதுடன், கூட்டுறவு உறுப்பினர் மற்றும் உறுப்பினர் நிறுவனங்களுக்கு மற்ற நிதி சேவைகளை வழங்குகிறது.
   - உதாரணம் : சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி., தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி
4. பொது கூட்டுறு வகை வங்கிகள்
   - பாராளுமன்றத்தின் தனிச்சட்டத்தால் உருவாக்கப்பட்டு இந்திய அரசுக்கு முழுமையான சொந்தமாக உள்ள வங்கிகள்
   - உதாரணம் - IFCI, SIDBI., EXIM Bank

47. பல்வேறு வகையான வங்கிகளைச் செயல்பாடுகளின் அடிப்படையில் வகைப்படுத்துக.உதாரணம் தருக.

| வ. எண் | வங்கிகள் | உதாரணம் |
|---|---|---|
| 1. | மைய வங்கி | இந்திய ரிசர்வ் வங்கி - 1935 |
| 2. | வணிக வங்கி | பாரத ஸ்டேட் வங்கி<br>லட்சுமி விலாஸ் வங்கி |
| 3. | வளர்ச்சி வங்கி | IFCI, SIDBI., EXIM Bank |
| 4. | கூட்டுறவு வங்கி | சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி., தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி |
| 5. | வெளிநாட்டு வங்கி | அமெரிக்கன் வங்கி., - அமெரிக்கா |

| | | |
|---|---|---|
| | | பார்க்லேஸ் வங்கி - இங்கிலாந்து |
| 6. | வட்டார கிராமிய வங்கிகள் | பாண்டியன் கிராம வங்கி, மதுரை<br>பல்லவன் கிராம வங்கி, சேலம் |
| 7. | சிறப்பு வங்கிகள் | EXIM Bank<br>தேசிய வீட்டு வசதி வங்கி |
| 8. | உள்ளூர் பகுதி வங்கிகள் | கரையோர உள்ளூர் பகுதி வங்கி, விஜயவாடா, ஆந்திரா<br>சுபத்திரா உள்ளூர் பகுதி வங்கி, கோல்பூர், மகாராஷ்டிரா |
| 9. | சிறிய நிதி வங்கிகள் | ESAF சிறிய நிதி வங்கி, கேரளா<br>FINCARE சிறிய நிதி வங்கி குஜராத் |
| 10. | செலுத்துதல் வங்கி | ஏர்டெல் செலுத்துதல் வங்கி<br>பே டிஎம் செலுத்துதல் வங்கி<br>இந்திய அஞ்சல் செலுத்துதல் வங்கி |

48. வணிக வங்கிகளின் பரவலாக்கப்பட்ட வங்கி சேவைகளைச் சுருக்கமாக விளக்குக.

1. வங்கி காப்பீட்டுறுதி
   - இது காப்பீடு கொள்கைகளை அல்லது பொருட்களை ஒரு வங்கியானது மற்றொரு காப்பீடு நிறுவனத்துடன் இணைந்து வழங்குவது வங்கி காப்பீட்டுறுதி ஆகும்
2. வணிகர் வங்கி
   - திட்ட ஆலோசனை வழங்குதல், காப்புறுதியளித்தல் போன்ற ஒரு நிறுவனம் தொடங்குவதற்க்கு தேவையான சேவைகள் வழங்கும் வங்கி துணை வங்கி வணிகர் வங்கி ஆகும்
3. சில்லறை வங்கியியல்( தனி நபர் வங்கி)
   - வங்கி சேவையானது அதிகமான இறுதி நிலை தனி நபர் வாடிக்கையாளர்களுக்கு அடைவதை குறிக்கிறது
   - கடன் அட்டை வழங்குதல், தனி நபர் கடன் ஆகியவை
4. வீட்டு வசதி கடன்
   - அசையா சொத்தின் மீது வீட்டுக்கடன், அடமான கடன் வழங்குதலை குறிக்கும்
5. பரஸ்பர நிதி

- முதலீட்டார்களின் சேமிப்பினை மூலதன் சந்தை மற்றும் பண சந்தைகளில் பன்முகப்படுத்தப்பட்ட பத்திரங்களில் முதலீடு செய்யும் நிதி இடைத்தரகராக செயல்படுகிறது

6. துணிகர முதலீட்டு நிதி
7. கடன் வசூல் முகைமை

49. வணிக வங்கிகளின் பல்வேறு வகையான இரண்டாம் நிலை செயல்பாடுகளை விளக்குக.

1. நிதி பரிமாற்றம்
   - வங்கிகள் கேட்பு வரைவோலைகள், காசோலைகள் போன்றவைகளை வெளியிடுவதுடன் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்க்கு நிதி பரிமாற்றம் செய்ய உதவுகிறது
2. நிலை ஆணை முறையில் செலுத்தும் காப்பீடு முனைமம், வாடகை முதலியன
   - வாடிக்கையாளர்களிடமிருந்து வரும் அறிவுறுத்தலின் படி காப்பீடு முனைமம், வாடகை போன்றவற்றை செலுத்துகின்றன
3. காசோலைகள் பெறுதல் மற்றும் செலுத்துதல்
   - வாடிக்கையாளர் சார்பாக காசோலைகள் பெறுதல் மற்றும் செலுத்துதல் பணியினை மேற்கொள்கின்றன
4. நிறைவேற்றாளர், அறங்காவலர் மற்றும் சட்டவாதியாக செயல்படுதல்
   - வாடிக்கையாளர்கள் விருப்பத்திற்கேற்ப வங்கி நிறைவேற்றாளர், அறங்காவலர் மற்றும் சட்டவாதியாக செயல்படுகிறது
5. பங்குசந்தை பரிவர்த்தனைகளை நடத்துதல்
   - வாடிக்கையாளர்கள் சார்பில் வங்கி இணையம் மூலம் பங்குசந்தை பரிவர்த்தனைகளை செய்கிறது
6. வருமான வரி கணக்கை தயாரித்தல்
   - வாடிக்கையாளர்கள் சார்பில் வங்கிகள் வருமான வரி கணக்கை ஆண்டுதோரும் தாயரிக்கிறது
7. அந்நிய செலாவணி வர்த்தகத்தில் ஈடுபடுதல்
   - வாடிக்கையாளர்கள் சார்பில் வங்கிகள் அந்நிய செலாவணி வர்த்தகத்தில் ஈடுபடுகிறது
8. தொடர்பாளராக செயல்படுதல்
   - வாடிக்கையாளர்கள் சார்பில் வங்கிகள் தொடர்பாளராக செயல்பட்டு பயணச்சீட்டு, கடவு சீட்டு போன்றவைகளை பெறுகிறது

50. வணிக வங்கிகளால் நிகழ்த்தப்படும் பல்வேறு வகையான முதன்மை செயல்பாடுகளைப் பற்றி விவாதிக்க.

1. **வைப்புகளை ஏற்றல்**

அ. **கேட்பு வைப்புகள்**

- இந்த வைப்புகள் எந்த நாளிலும் கேட்கும் போது திருப்பி அளிக்கப்படவேண்டும்
- கேட்பு வைப்புகள் இரண்டு வகைப்படும் அவை 1. சேமிப்பு வைப்பு, 2. நடப்பு வைப்பு
- **சேமிப்பு வைப்பு**
  - பொதுமக்கள் இந்த கணக்கில் வைப்புகள் செய்யலாம்
  - வணிக நிறுவனங்கள் சேமிப்பு கணக்குகளை தொடங்க அனுமதி கிடையாது
- **நடப்பு வைப்பு**
  - வணிக நிறுவனங்களுக்கு ஏற்றது
  - குறைந்த பட்ச இருப்பு கட்டாயம்
  - குறைந்த பட்ச இருப்பு தொகைக்கு வட்டி வங்கி வழங்காது

ஆ. **கால வைப்புகள**

- குறிப்பிட்ட காலத்திற்க்கு பின் திருப்பி செலுத்தப்படும் வகையில் பெறப்படும் வைப்புகள் கால வைப்புகள் ஆகும்.
- **நிலை வைப்பு**
- ஒரு தொகையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட வட்டிக்கு வைப்பு செய்வதை குறிக்கும்
- தொடர் வைப்பு
- ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தொகையை ஒப்புகொள்ளப்பட்ட காலத்திற்கு வைப்பு செய்து வருவதை குறிக்கும்

2. கடன்கள் மற்றும் முண்பணம் வழங்குதல்

- வட்டி வருமானம் பெறுவதற்காக கடன் கொடுப்பது வங்கியின் முக்கிய பணி ஆகும். கடன்களை கேட்பு கடன் , முன் பணம் கடன், பருவக்கால கடன் போன்ற முறையில் வழங்குகின்றன
- கேட்புகடன் என்பது எப்போது வேண்டுமானலும் திருப்பி செலுத்தல் வேண்டும்

- ❖ பருவக்காலக்கடன்கள் ஒப்பந்த காலம் முடிவடைந்த பிறகும் நீடிக்கப்படும்
- ❖ ஒரு வருடத்திற்க்குள் செலுத்தப்பட வேண்டிய கடன் முன்பணக்கடன் ஆகும்

அ. முன்பணம்

- ❖ வங்கி மேல்வரை பற்று
- ❖ ரொக்க கடன்
- ❖ மாற்று சீட்டினை தள்ளுபடி செய்தல்

ஆ. கடன்கள்

- ➢ வீட்டுகடன்
- ➢ நுகர்வோர்கடன்
- ➢ வாகன கடன்
- ➢ கல்விகடன்
- ➢ நகைக்கடன்

3. கடனை உருவாக்குதல்
   - ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதோடு ரொக்கக்கடன் சுழற்ச்சிகளை வணிக வங்கி மூலம் உருவாக்கி , பெரிய அளவில் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவுகிறது

51. இந்தியாவில் உள்ள பண்டகக் காப்பகங்களை விளக்குக.

1. இந்திய உணவுக் கழகம்
   - ➢ இது உணவு தாணியங்களை பாதுகாக்கும் வசதிகளை தருகிறது
   - ➢ இந்நிறுவனம் பொருட்களை பாதுகாக்கும் வசதியை மாநில, மத்திய பண்டகக் காப்பகங்கள் மாநில அரசுகள் மற்றும் தனியாரிடமிருந்து வாடகைக்கு எடுத்து கொள்கிறது
2. மத்திய பண்டக் காப்பக கழகம்
   - ➢ 1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது
   - ➢ வேளான் பொருட்கள், விதைகள் , உரங்கள் , விவசாய கருவிகள் மற்றும் பிறபொருட்களின் சேமிப்பிற்கான முகமைகளை ஏற்படுத்துவது இதன் முக்கிய பணியாகம்
3. மாநில பண்டக காப்பகங்கள்
   - ➢ மத்திய பண்டக் காப்பக கழகத்தின் ஒப்புதலுடன் மாநில அரசுக்கு சொந்தமாக உருவாக்கப்படுகிறது

- இதற்கான நிறுவுகை செலவில் 50% மத்திய பண்டக் காப்பக கழகமும், மீதி 50% மாநில அரசால் வழங்கப்படும்

4. தமிழ்நாடு பண்டக காப்பகங்கள்
    - 1959 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது
    - தற்போது மாநிலம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ளது

52. பல்வேறு வகையான பண்டகக் காப்பகங்கள் யாவை?

- தனியார் பண்டகக் காப்பகங்கள்
    - தனியார் வணிக நிறுவனங்களால் உருவாக்கப்பட்டு அவர்களுக்காக பயன்படுத்தப்படுபவை ஆகும்
    - பிற வணிக நிறுவனங்கள் ப்யன்படுத்த முடியாது
- அரசு பண்டகக் காப்பகங்கள்
    - அரசின் திட்டங்களை செயல்படுத்துவதற்காக் அரசால் நிறுவப்படுகிறது
    - இதன் சேவைகள் பெரும்பாலும் அரசு துறைகளுக்கே கிடைக்கிறது
- பொது பண்டகக் காப்பகங்கள்
    - பெரிய அளவில் பொது மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டது
    - இவை அரசின் சட்ட விதிகளுக்கு உட்பட்டு செயல்படுகின்றன
    - தனி நபர், வணிக நிறுவனங்கள் இவற்றை வாடகைக்கு பயன்படுத்தி கொள்ளலாம்
- கூட்டுறவு பண்டகக் காப்பகங்கள்
    - கூட்டுறவின் அடிப்படையில் ஏற்படுத்தப்படுகின்றன
    - கூட்டுறவின் உறுப்பினர்கள் இந்த வசதியை பயன்படுத்தி கொள்கின்றனர்
- பிணைய காப்பு பண்டகக் காப்பகங்கள்
    - அரசிடம் உரிமம் பெற்று இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளை சுங்க வரி செலுத்தும் வரை பண்டக் காப்பகத்தில் வைத்திருக்க பயன்படுத்தப்படுகிறது
- நிறுவன முறை பண்டகக் காப்பகங்கள்
    - ஒவ்வொரு நிறுவனமும் செய்யும் வேலையின் தன்மையை பொறுத்து அந்நிறுவனங்கள் பண்டக காப்பகங்களை வைத்திருக்கின்றன
- விநியோக மைய பண்டகக் காப்பகங்கள்

- தற்காலிகமாக சரக்குகளை வைப்பதற்கும், பகிர்ந்து அளிப்பதற்கும் பயன்படுத்தப்படும் பண்டகக் காப்பகங்கள் விநியோக மைய பண்டகக் காப்பகங்கள் ஆகும்

➢ சிறப்பு பொருள் பண்டகக் காப்பகங்கள்

- பருத்தி, புகையிலை போன்ற சிறப்பு பொருட்களை பாதுகாப்பதற்காக உருவாக்கப்படும் பண்டகக் காப்பகங்கள் ஆகும்

➢ குளிர்பதன பண்டகக் காப்பகங்கள்

- பொருட்கள் குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் கொண்டு செல்லப்படுகின்றன
- குளிரூட்டப்பட்ட பண்டகக்காப்பகங்களில் சேமிக்கப்படுகின்றன
- சரியான தரத்தில் குளிரூட்டப்பட்டு சேமிக்கப்படும் பொருட்கள் ஆண்டு முழுவதும் கிடைக்க வழிவகை செய்கிறது
- முட்டை, பால் போன்ற விரைவில் அழுகும் தன்மையுடைய பொருட்களை சேமித்து வைக்க உதவுகிறது

53. பண்டகக் காப்பாளர் இரசீது -லிருந்து பண்டக சான்றாணை வேறுபடுத்துக.

| வ.எண் | பண்டக சான்றாணை | பண்டக இரசீது |
|---|---|---|
| 1. | உரிமை மாற்றத்தை ஏற்படுத்தும் | உரிமை மாற்றத்தை ஏற்படுத்தாது |
| 2 | மற்றவர்களுக்கு மாற்றி தர இயலும் | மாற்றி தர இயலாது |
| 3 | பிணையமாக வைக்க முடியும் | பிணையமாக வைக்க முடியாது |
| 4 | சரக்கை பெற்று கொண்டதற்கான ஒரு அத்தாட்சி ஆவணம் மற்றும் சரக்கை பெறுவதற்கான அதிகாரத்தை தரும் ஓர் ஆவணம் ஆகும் | சரக்கை பெற்று கொண்டதற்கான ஒரு அத்தாட்சி ஆவணம் மட்டுமே |
| 5 | மேலெதி கொடுப்பதன் மூலம் பொருட்களை பண்டகாப்பகத்திடமிருந்து பெறமுடியும் | பொருட்களின் உரிமையாளர் கடிதம் மற்றும் இந்த ரசீது ஆகியவற்றை இணைத்து தான் பொருட்களை பண்டகாப்பகத்திடமிருந்து பெறமுடியும் |

54. போக்குவரத்தின் நன்மைகளை விவாதிக்க.

1. உற்பத்தி திறனை அதிகரிக்கிறது
2. அதிகமான பொருட்களுக்கான தேவை மற்றும் பல்வேறு நுகர்வு பொருள்களின் தேவையை தூண்டுகிறது
3. சந்தை மேம்படுத்துகிறது மற்றும் வளர்ந்து விரிவடைய செய்கிறது
4. விலைஉறுதி பாட்டிற்க்கு உதவுகிறது
5. பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது
6. இது விசேசப்படுத்தி அதிக அளவு உற்பத்திக்கு உதவுகிறது
7. உற்பத்தித் தயாரிப்பு மற்றும் வடிவமைப்பில் புதுமைகளை ஊக்குவிக்கிறது

55. போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விவரிக்க.

1. நிலப்போக்குவரத்து
   - நில வாகன போக்குவரத்து மூலம் மக்கள் மற்றும் பொருட்கள் கொண்டு செல்வதை நிலப் போக்குவரத்து என்கிறோம்
   - இது மேற்பரப்பு போக்குவரத்து எனவும் அழைக்கப்படுகிறது
   - நிலப்போக்குவரத்தில் பின்வருபவை அடங்குகின்றன
   - பொதி விலங்குகள்
   - மாட்டு வண்டிகள்
   - சாலை போக்குவரத்து
   - இயந்திர சரக்கேற்றிகள் மற்றும் பேருந்துகள்
   - டிராம் வண்டிகள்
   - தொடர் வண்டி போக்குவரத்து
   - மெட்ரோ ரயில்
   - மோனோ ரயில்
   - புல்லட் ரயில்
   - குழாய் போக்குவரத்து
   - கன்வேயர் போக்குவரத்து
   - கயிறு வழி போக்குவரத்து
   - உயர் சுழற்சி வளைய போக்குவரத்து
2. நீர் போக்குவரத்து
   - நீர் போக்குவரத்து என்பது மக்களை நகர்த்துவதற்காக கடல், பெருங்கடல், ஏரி, நதி, கால்வாய் முதலியனவற்றில் படகு, கப்பல் அல்லது படகோட்டம் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் செயல்முறை ஆகும்

- நீர் போக்குவரத்து இரு வகைப்படும்
  - ❖ உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து
    - ✓ உள்நாட்டு நீர்வழிகளில் நதிகள், கால்வாய்கள் மற்றும் ஏரிகள் ஆகியவை அடங்கும்
    - ✓ இயற்கையாக இயங்க கூடிய ஆறுகள் இயற்கை நீர்வழிகள் எனப்படும்
    - ✓ கால்வாய்கள் மற்றும் கால்வாய் ஆறுகள் செயற்கை நீர்வழி வகைக்கு சொந்தமானவை

  - ❖ பெருங்கடல் நீர் வழி போக்குவரத்து
    - ✓ உலகின் நாடுகளில் பொருளாதார , சமூக மற்றும் கலாச்சார உறவுகளின் வளர்ச்சியில் பெருங்கடல் போக்குவரத்து முக்கிய பங்கு வகிக்கிறது
    - ✓ மலிவான போக்குவரத்து என்பது அதன் சிறந்த நற்பெயர் ஆகும்

3. விமான போக்குவரத்து
   - விமான போக்குவரத்து வேகமான மற்றும் விலையர்ந்த போக்குவரத்து முறை ஆகும்
   - வர்த்தக விமான போக்குவரத்து இப்போது வெளிநாட்டு போக்குவரத்திற்கான மிக முக்கிய முறையாக உள்ளது

   56. காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி.

1. காப்பீடு பெறுநலன்
   - காப்பீடு ஒப்பந்தத்திற்கு காப்பீடு பெரு நலன் அவசியம்
   - காப்பீடு பெருநல்ன் என்பது குறிப்பிட்ட நிதி சார்ந்த அக்கறை இருக்க வேண்டும்
2. மிக்க நம்பிக்கை
   - காப்பீடு மிக்க நம்பிக்கை அடிப்படையிலான ஒப்பந்தம் ஆகும்
   - இதில் காப்பீடு தருநரும் மற்றும் பெறுநர் இருவரும் அனைத்து கருப்பொருள் உண்மைகளை ஒருவருக்கு ஒருவர் வெளிப்படுத்திடவேண்டும்
3. ஈட்டுறுதி

- ஒருவருக்கு ஏற்படும் உண்மையான நட்டத்தை ஈடு செய்வதே ஈட்டுறுதியாகும்
- இக்கோட்பாடு சொத்து காப்பீட்டிற்கு மட்டும் பொருந்தும்

4. அண்மை காரணம்
   - ஓர் இழப்பு ஏற்பட காப்பீடு செய்யப்பட்ட இடர் அண்மை காரணமாக இருந்தால் மட்டுமே காப்பீடு தருநர் பொறுப்பாவார்
5. பகிர்ந்தளித்தல்
   - ஒரே கருப்பொருள் ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்களிடம் காப்பீடு செய்யப்பட்டிருப்பின் அதற்கு இரட்டை காப்பீடு எனப்படும்
   - காப்பீடு பெறுநருக்கு ஏற்படும் இழப்பினை சம்பந்தப்பட்ட காப்பீடு நிறுவனங்கள் அவரவர் செய்திருக்கின்ற காப்பீடு அடிப்படையில் அவரவர்களுக்கான பங்கினை பகிர்ந்து அளித்தல் வேண்டும்
6. பகர உரிமை
   - பகர உரிமையின் அடிப்படை தத்துவம் ஒருவரின் இடரை மற்றொருவர் ஈடுசெய்வதாகும்
   - பகர உரிமை என்பது காப்பீடு பெறுநர் தனக்கு ஏற்பட்ட இடரை காப்பீடு தருநர் ஈடுசெய்தவுடன், இடர் தொடர்பான அனைத்து உரிமைகளையும் காப்பீடு தருநருக்கு மாற்றி தருவதாகும்

57. காப்பீட்டின் வகைகளை விளக்குக.

1. ஆயுள் காப்பீடு
   - ஒருவர் தனது ஆயுளையோ அல்லது தான் காப்பீடு பெறுநலன் கொண்ட பிரிதொருவரின் ஆயுளையோ காப்பீடு செய்வாராயின் அது ஆயுள் காப்பீடு ஆகும்
   - திட்டாவனத்தில் காப்பீடு பெறுநர் தனது இறப்பு எனும் இடர் குறித்து காப்பீடு கொள்கிறார்
   - மனித ஆயுளை தழுவிய நிகழ்ச்சி நிகழும் போது காப்பீட்டுறுதி தருநர் திட்டாவணத் தொகையை கொடுக்க பொறுப்பேற்கும் ஒப்பந்தம் ஆயுள் காப்பீடு ஆகும்
   - ஆயுள் காப்பீட்டிற்க்கும் ஆயுள் விபத்து காப்பீட்டிற்கும் ஈட்டுறுதி கோட்பாடு பொருந்தாது

2. ஆயுள் சாரா காப்பீடு/ பொது காப்பீடு
   - பொதுகாப்பீடு என்பது ஆயுள் காப்பீட்டுறுதி தவிர அனைத்து வகையான காப்பீட்டையும் உள்ளடக்கியது
   - பொதுக்காப்பீட்டின் வகைகள்
     - தீக்காப்பீடு
     - கடல் சார் காப்பீடு
     - கொள்ளை சார் காப்பீடு
     - மருத்துவ காப்பீடு
     - பயிர்காப்பீடு
     - வாகன காப்பீடு
     - மூன்றாவது நபர் காப்பீடு
     - விளையாட்டு காப்பீடு

58. இடர்களுக்கான காரணங்களை விவரி.

1. இயற்கை காரணிகள்
   - மழை, வெள்ளம், புயல் போன்ற மனிதனால் குறைந்த அளவே கட்டுப்படுத்தக்கூடிய இயற்கை காரணிகளால் இடர்கள் ஏற்படுகின்றன
   - இவற்றின் காரணமாக அதிக உயிரிழப்புகள், சொத்துகள் சேதமடைதல் மற்றும் வியாபாரத்தில் அதிக நட்டம் ஆகியவை ஏற்படுகிறது
2. மனித காரணிகள்
   - பணியாளர்களின் நேர்மையற்ற தன்மை, கவனக்குறைவு, அறியாமை, திறமையற்ற மேலாண்மை போன்றவை மனித காரணிகளாகும்
3. பொருளாதார காரணிகள்
   - பொருட்களின் விலை, தேவை, போட்டி, தொழில்நுட்ப மாற்றம் போன்றவற்றில் ஏற்படும் நிச்சயமற்ற தன்மைகள் இதில் அடங்கும்
   - வட்டி வீதம் அதிகரிப்பு, அதிக வரி விதிப்பு போன்ற நிதி பிரச்சனைகளும் இதில் அடங்கும்
4. பிற காரணங்கள்
   - எதிர்பாராத அரசியல் பிரச்சனைகள், இயந்திர கோளாறு உள்ளிட்ட காரணங்களால் நட்டம் ஏற்பட வாய்ப்புள்ளது

59. தனி உரிமையியலின் குணாதிசயங்களைக் கணக்கிடுக

1. தனி உரிமையியல் தொடர்புடைய நிபந்தனைகள் , விதிமுறைகள் உடன்படிக்கையில் மூலம் ஏற்படுகிறது
2. கால அளவு 5 ஆண்டுகள் அல்லது ஒப்புகொண்டப்படி
3. தனி உரிமம் பெற்றவர் தனி உரிம காலத்தின் எந்த போட்டித் தொழிலையும் மேற்கொள்ள உரிமை இல்லை
4. ஒப்பந்தப்படி தனி உரிமம் பெற்றவர் தனி உரிமம் அளித்தவருக்கு ஒப்பந்தப்படி ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்துகிறார்
5. தனி உரிமம் பெற்றவர் தனி உரிமம் அளித்தவரின் வணிக கோட்பாடுகளை தவறாமல் பின்பற்ற வேண்டும்
6. தனி உரிமம் அளித்தவர் தனி உரிமம் பெற்றவருக்கு தேவையான பயிற்ச்சினை அளிக்க வேண்டும்

60. ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பம்சங்களைத் தெளிவுபடுத்துக.

1. கடன் ஏடுகளை பராமரித்தல்
   - வணிகரின் ஏட்டுகடன்களை பராமரிக்கும் முழு பெறுப்பினை தனி உரிமை போராள் ஏற்று கொள்கிறார்
2. கடன் எல்லைகளை நிர்வகித்தல்
   - வாராக்கடன் தொடர்புடைய நிதிச்சுமையை தனி உரிமை போராள் ஏற்று கொள்கிறார்
   - இதனால் வணிகரின் இடர்பாடு குறைகிறது
3. ரொக்க முன்பணம்
   - தனி உரிமை போராள் கடன் விற்பனையில் 80% வரை ரொக்கக்கடன் வழங்குகிறார்
   - இதனால் வணிகரின் நீர்மை தன்மை அதிகரிக்கிறது
4. வசூல் சேவை
   - தனி உரிமை போராள் கடனை வசூலித்தல், காசோலை வசூலித்தல் போன்ற பணிகளை மெற்கொள்கிறார்
5. வணிகருக்கு ஆலோசனை கூறுதல்
   - தனி உரிமை போராள் கடந்த காலங்களில் வாடிக்கையாளர் மூலம் தனக்கு ஏற்பட்ட அனுபத்தின் மூலம் வணிகரின் வாடிக்கயாளர்களின் கடன் தகுதி, வாராக்கடன் தொடர்பான செய்திகளை வழங்கிறார்

61. புற ஒப்படைப்பின் நன்மைகளை விவரிக்க.

1. முதன்மை நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகிறது
   - பிற நிறுவனங்களிடம் இணைப் பணிகளை ஒப்படைப்பு செய்வதன் மூலம் நிறுவனம் முதன்மை நடவடிக்கைகளில் முழுமையாக கவனம் செலுத்துகிறது

2. பொருளாதார மேப்பாட்டை ஊக்குவிக்கிறது
   - புறஒப்படைப்பின் மூலம் தொழில் முனைவோர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்
   - இதன் மூலம் வேலைவாய்ப்பு உருவாக்கம், ஏற்றுமதி வளர்ச்சி போன்றவைகள் மூலம் பொருளாதாரம் மேம்பாடு அடைகிறது

3. வேலைவாய்ப்புகளை ஊக்குவிக்கிறது
   - புறஒப்படைப்பின் மூலம் புதிய வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கான வழியாக அமைவதுடன் அதிக அளவிளான வேலை வாய்ப்புகள் கிடைக்க வழிவகை செய்கிறது
4. குறைவான முதலீடு
   - புறஒப்படைப்பின் மூலம் இணைப்பணிகளை ஒப்படடைப்பு செய்வதால் நிறுவனத்திற்கான முதலீடு குறைகிறது
5. சிறந்த செயலாக்கம்
   - புற ஒப்படைப்பு செய்த நிறுவனங்கள் தனது முதன்மை பணிகளை சிறப்பாக செயல்படுத்த முடிகிறது
   - புற ஒப்படைப்பு பெற்ற நிறுவனங்கள் பெற்ற பணிகளை சிறப்பாக செய்யும் போது மேலும் பல்வேறு பணிகள் பெற உதவுகிறது

62. தொழில் செயல்முறை புறத்திறனீட்டல், அறிவுசார் செயல்முறை புறத்திறனீட்டல் ஆகியவற்றிற்கு இடையேயான வேறுபாட்டை விளக்குக.

| | தொழில் முறை புற ஒப்படைப்பு/புறத்திறனீட்டல் | அறிவுசார் புற ஒப்படைப்பு/ புறத்திறனீட்டல் |
|---|---|---|
| பொருள் | பிற நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் சிறப்பு செயல்களை பெறுவது | அறிவு அடிப்படையிலான செயல்களை வெளிநபர்களை பயன்படுத்தி தங்களின் |

| | | |
|---|---|---|
| | | நோக்கத்தை நிறைவேற்றி கொள்வது |
| தேவை | நல்ல தகவல் தொடர்பு திறன் | சிறப்பான அறிவு திறன் |
| சேவை | குறைவான இறுதிநிலை சேவை low end services | உயர் இறுதிநிலை சேவைகள் high end services |
| செயல்முறைகள் | முன் வரையறுக்கப்பட்ட செயல்முறை | வணிகத்தை பற்றிய புரிதல் மற்றும் பயன்படுத்தும் இடம் தொடர்பானவை தேவை |
| ஊழியர்கள் | அறிவுதிறன் பெற்ற ஊழியர்கள் தேவையில்லை | அறிவுத்திறன் மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்கள் அவசியம் |
| நிபுணத்துவம் | செயல்முறை | அறிவு |
| தொடர்பு | செலவு மத்தியஸ்தம் | அறிவு மத்தியஸ்தம் |

63. மின்னணு வணிக மாதிரிகள் பற்றிக் குறிப்பு வரைக.

1. தொழில் நிறுவனத்திற்கும் வாடிக்கையாளர்களுக்கும் இடையேயான வணிகம்[B2C- BUSINESS TO CONSUMER]
   - நேரடியாக வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்வது ஆகும்
2. தொழில் நிறுவனங்களுக்கு இடையான வணிகம்[B2B- BUSINESS TO BUSINESS]
   - இரு வியாபார நிறுவனங்களுக்கிடையே நடைபெறும் வாங்குதல் விற்றலை குறிக்கும்
3. நுகர்வோர்களுக்கு இடையேயான வணிகம்[C2C - CONSUMER TO CONSUMER]
   - இரு நுகர்வோர்களிடையே நடைபெறும் வாங்குதல் விற்றலை குறிக்கும்
4. நுகர்வோர் தொழில் நிறுவனத்திற்கு இடையேயான வணிகம் [C2B - CONSUMER TO BUSINESS]
   - நுகர்வோரின் தகவல்களை தொழில் நிறுவனங்கள் பெறுவது இம்முறையில் அடிப்படையிலானது
5. தொழில் நிறுவனத்திற்க்கும் அரசுக்கும் இடையேயான வணிகம் {B2G BUSINESS TO GOVERNMENT}
   - பொருள்கள் மற்றும் சேவைகளை அரசு துறைக்கு விற்பனை செய்வது ஆகும்

64. சமூகப் பொறுப்புணர்வின் பொருள் மற்றும் அதன் தேவைகள் பற்றி தெளிவாக விளக்குக?

இலக்கணம்:

- சமுதாய பொது நலன் மேம்பாடு கருதி(செயல்படத் தக்க ) உரிய நபர், சமுதாய நப்பிக்கைக்குரிய அடிப்படை மேன்மை, சமுதாய ஒற்றுமை, உறுதித்தன்மை மற்றும் நிலைத்தன்மை போன்றவற்றில் பங்களிப்பை ஏற்படுத்துவது ஆகும் - பீட்டர் F டிரக்கர்

சமூக பொறுப்புணர்வுவின் தேவை :

1. சுய ஆர்வம்
   - சமூகத்தின் தேவை மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதன் மூலம் தொழில் உரிமையாளர்கள் அங்கீகரிக்கப்படுகின்றனர்
2. சமுதாய உருவாக்கம்
   - நாட்டின் வளங்களை முழுமையாக பயன்படுத்டுவதன் மூலம் தொழில் நிறுமங்கள் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்குகின்றன
3. சமுதாயத்தின் உருவகம்
   - சமூக எதிர்பார்ப்புகளை தொழில் நிறுமங்களால் நிறைவேற்ற முடியும் என்ற எண்ணத்தை மக்கள் மனதில் ஏற்படுத்த வேண்டும்

65. சமூகப் பொறுப்புணர்வுக்கு சாதகமான விவாதங்களை புரிந்து கொள்ளுமாறு எடுத்துக்காட்டுகளுடன் விவாதிக்க?

- பங்குநர்களின் நலன் பாதுகாத்தல்
  - ❖ பலதரப்பட்ட பங்குநர்களுக்கு செயலாற்றும் வகையில் சமூக பொறுப்புகளை தொழில் நிறுவனங்கள் ஏற்க வேண்டும்
  - ❖ உதாரணம் : பணியாளர்களின் கூலி மற்றும் ஊதியத்தை குறித்த காலத்தில் தொடர்ந்து வழங்குதல்
- சமுதாய மேம்பாடு
  - ❖ சமூக பொறுப்புணர்வின் நடத்தையானது தொழில் மற்றும் சமூகத்திற்கு இடையேயான நல்லுறவை வலுப்படுத்துவதற்கு அவசியம்
- சமுதாயத்தின் தாக்கத்தை அளவிடுதல்
  - ❖ தொழில் நிறுவனம் சமுதாயத்தின் நலன் கருதி சட்டப்படி அவர்களின் எதிர்பார்ப்புகளை கட்டாயமாக நிறைவேற்ற வேண்டும்
- தொழில் சார்ந்த நடத்தைகள்

- ❖ தொழிலில் பண்பட்ட மேலாளர்கள் ஒரு சிறந்த சமூக உணர்வை கொண்டவராக இருக்க வேண்டும்
- ❖ சமூக பொறுப்புணர்வு கொண்ட ஒரு மேலாளர் தொழிலில் பண்பட்டவராக கருதப்படுகிறார்

➢ பொது கருத்து

- ❖ சமூக பொறுப்பை ஒரு நோக்கமாக ஏற்றுகொள்வதன் மூலம் பொதுமக்களின் கருத்துகளை மேப்படுத்த உதவும்
- ❖ இதன் மூலம் தொழிலுக்கு நன்மதிப்பு கிடைக்கும்

66. சமூகப் பொறுப்புணர்வுக்கு எதிரான விவாதங்கள் யாவை?

- ➢ கருத்து தெளிவின்மை
- ➢ பொருளாதார இலக்குகளை தளர்த்தல்
- ➢ சமூகத்திறன் இன்மை
- ➢ நுகர்வோர் மீதான சுமை
- ➢ அதிகாரமற்ற பொறுப்பு
- ➢ பொறுப்புகளை தவறாக பயன்படுத்துதல்
- ➢ முறையற்ற பங்கு
- ➢ அதிக சுமை உடைய பொறுப்பு

67. சமூகப் பொறுப்புணர்வுக்கு எதிரான விவாதங்கள் ஏதேனும் ஐந்தினை விளக்குக?

➢ **கருத்து தெளிவின்மை**

1.சமூக பொறுப்புணர்வு என்பதன் பொருள் தெளிவாக வரையறுக்கப்படாமல் உள்ளது

2. எனவே இக்கோட்பாட்டை செயல்படுத்துவதில் சிக்கல் உள்ளது

➢ **பொருளாதார இலக்குகளை தளர்த்தல்**

- ❖ சமூக பொறுப்புணர்வை ஏற்றுகொள்வதன் மூலம் வணிக பொருளாதார இலக்குகளை சமரசம் செய்ய வேண்டியுள்ளது

➢ **சமூகத்திறன் இன்மை**

- ❖ தொழில் அமைப்புகள் மற்றும் அதன் மேலாளர்கள் சமூகம் சார்ந்த கடமைகளை பற்றி நன்கு அறிவதில்லை

➢ **நுகர்வோர் மீதான சுமை**

- ❖ தொழில் அமைப்புகள் சமூகம் சார்ந்த பிரச்சனைகளில் ஈடுபடுகின்ற போது அதற்கான செலவு அதிகரிக்கிறது

➢ **அதிகாரமற்ற பொறுப்பு**

- ❖ தொழில் அமைப்புகள் பொருளாதாரம் சார்ந்த அதிகாரங்கள் மட்டுமே கொண்டுள்ளது
- ❖ எனவே சமூகம் சார்ந்த சமூக பொருப்புணர்வுடன் திணிப்பது தவறான போக்கு ஆகும்

68. தொழிலின் சமூகப் பொறுப்புணர்வின் மூலம் நன்மை பெறும் குழுக்களை விவரி?

➢ உரிமையாளர் ஏற்கும் தொழில் தொடர்பான பொறுப்புணர்வுகள்

- ❖ தொழிலை சிறப்பாக இயக்குதல்
- ❖ மூலதனம் மற்றும் வளங்களை சரியான முறையில் பயன்படுத்துதல்
- ❖ மூலதனத்தை முறையாக முதலீடு செய்தல்

➢ முதலீட்டாளர்களின் மீதான பொறுப்புணர்வு

- ❖ மூலதனத்தின் பாதுகாப்பை உறுதி செய்தல்
- ❖ முதலீட்டின் மீதான வட்டியை தொடர்ந்து செலுத்துதல்
- ❖ குறித்த காலத்திற்குள் மூலதன தொகையை திரும்ப செலுத்துதல்

➢ பணியாளர்கள் மீதான பொறுப்புணர்வு

- ❖ பணியாளர்களின் கூலி மற்றும் ஊதியத்தை குறித்த காலத்தில் தொடர்ந்து வழங்குதல்
- ❖ பணியாற்றுவதற்கு ஏற்ற இணக்கமான சூழ்நிலையை உருவாக்குதல் மற்றும் இதர வசதி வாய்ப்புகளை நல்குதல்
- ❖ வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதல்
- ❖ குறித்த காலத்தில் பயற்ச்சி அளித்து அவர்களின் செயல் திறனை மேம்படுத்துதல்

➢ பொருள் அளிப்பாளர்கள் சார்ந்த பொறுப்புணர்வு

- ❖ பொருட்கள் கொள்முதல் செய்வதற்கான தொடர் ஆணைகளை வழங்குதல்
- ❖ கடனுக்கான காலக்கெடுவினை நியமான முறையில் அளித்தல்
- ❖ உரிய காலத்தில் கடன் தொகையை திரும்ப செலுத்துதல்

➢ வாடிக்கையாளர் தொடர்பான பொறுப்புகள்

- ❖ வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் பொருட்கள் மற்றும் சேவைகள் இருத்தல்
- ❖ பொருட்கள் மற்றும் சேவைகள் தரத்தில் மேம்பாடு இருக்க வேண்டும்
- ❖ பொருட்கள் மற்றும் சேவைகள் தடையின்றி அளிக்கப்பட வேண்டும்

69. சமூகப் பொறுப்புணர்வை நீங்கள் எவ்வாறு வகைப்படுத்துவீர்கள்?

- ➢ பொருளாதார பொறுப்புணர்வு
  - ❖ நிறுவனங்கள் பொருளாதார நலனை அடைய முனையும் போது சமுக பொறுப்புகளும் நிறைவேற்றப்படுகின்றன
  - ❖ உதாரணம்
    - ✓ மக்களுக்கு தேவைப்படும் பொருளை தரமாக வழங்குதல்
    - ✓ நியமான இலாபம் ஈட்டல்
- ➢ சட்டப்பொறுப்புணர்வு
  - ❖ எந்த ஒரு வியாபார அமைப்பும் ஒரு சமூக பொறுப்புணர்வை உள்ளுணர்வாக கொண்டு செயல்படும் அமைப்பாக இருக்க வேண்டும்
  - ❖ நிறுவனத்திற்கான சட்ட விதிகளை முறையாக பின்பற்ற வேண்டும்
- ➢ தொழில் நன்னெறிமுறை பொறுப்புணர்வு
- ❖ சமுதாயத்தால் எதிர்பார்க்கப்படும் ஒரு வகை பொறுப்பு
- ❖ ஆனால் சட்டத்தில் குறிப்பிடாதவை
- ➢ தன் விருப்ப பொறுப்புணர்வு
  - ❖ ஒரு நிறுவனம் மேர்கொள்ளும் தன்னார்வ நடவடிக்கைகளை குறிக்கும்
  - ❖ உதாரணம் :
    - ✓ கல்வி நிறுவனங்களுக்கு நன்கொடை அளித்தல்
    - ✓ இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதல்

70. தொழில் நெறிமுறைகளின் பல்வேறு முக்கியக் கூறுகளை விளக்கவும்.

1. உயர்நிலை மேலாண்மையின் ஆதரவு
   - ➢ நன்நெறி குழுவிற்கு உயர்மட்ட மேலாண்மையின் ஆதரவு அவசியம்
   - ➢ நன்நெறி குழுவில் அனைத்து ஊழியர்களின் பிரதிநிதிகளும் இடம் பெறுதல் அவசியம்
2. நன்நெறி நடத்தை விதிகளை உருவாக்குதல் மற்றும் பரப்புதல்
   - ➢ நிறுவனங்கள் நன்நெறி நடத்தை விதிகளை உருவாக்கி அதை எழுத்து வடிவில் பணிபுரியும் அனைவருக்கும் புரியும்படி தெரிவிக்க வேண்டும்

- ➢ நன்நெறி நடத்தை விதிகள் ஒவ்வொரு பிரிவிற்க்கு தனித்தனியாக உருவாக்க வேண்டும்

3. நன்நெறி விதிமுறைகளை கடைபிடிப்பதை கண்காணித்தல்
   - ➢ நன்நெறி விதிமுறைகளை ஒவ்வொரு பிரிவும் அல்லது துறையும் கடைபிடிப்பதை கண்காணிக்க வேண்டும்
   - ➢ இதனை நன்நெறி கண்காணிப்பு எனப்படும்
4. அனைத்து ஊழியர்களையும் ஈடுபடுத்துதல்
   - ➢ நன்நெறி விதிகள் உருவாக்கப்படுவதற்கு முன் சம்பந்தப்பட்ட பணியாளர்களிடம் விவாதம் நடத்தி அவர்களின் எண்ண போக்கினை அறிந்து அதற்கு ஏற்ப அனைவரையும் உள்ளடக்கிய ஒரு நன்நெறி குழு உருவாக்கப்பட வேண்டும்
5. நன்நெறி பலனை அளத்தல்
   - ➢ நன்நெறி விதிகளால் விளைந்த பலன்களை ஆய்வு செய்ய நன்நெறி தணிக்கை அவசியம்

71. தொழில் நெறிமுறையின் குறியீடு பற்றி விவரிக்கவும்.

தொழில் நெறிமுறையில் உள்ளடங்கியவை

- I. நியமான விலையில் பொருட்களை அளித்தல்
- II. தரமான பொருட்களை அளித்தல்
- III. நுகர்வோரின் குறைகளை உரிய காலத்தில் தீர்வு காணுதல்
- IV. பொருட்களின் விலை நியாமற்ற முறையில் அதிகரிப்பதை தவிர்த்தல்
- V. ஊக வணிக நடவடிக்கையில் ஈடுபடாமல் இருத்தல்
- VI. நிறுவனம் முற்றுரிமை அடையும் நோக்கில் பொருள் விலை குறைப்பு கூடாது
- VII. பணியாளர்களுக்கு நியமான ஊதியம் வழங்குதல்
- VIII. பணியாற்றுவதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தி தருதல்
- IX. கணக்கேடுகளை முறையாக பராமரித்தல்
- X. அரசின் விதிமுறைகளை முறையாக பின்பற்றுதல்

72. பெரு நிறுவன ஆளுகையின் முக்கியத்துவத்தை பங்குதாரர்களின் நிலையிலிருந்து விளக்குக.

1) பெரு நிறுவன ஆளுகையின் மூலம் நிறுவனத்தின் வெற்றியை உறுதி செய்து பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த இயலும்
2) தொழில் அமைப்புகளின் நிலையான வளர்ச்சியை உறுதிப்படுத்துகிறது

3) பல்வேறுபட்ட பங்குதாரர்களின் நலன்களை சீரமைக்கிறது
4) முதலீட்டாளர்களின் நம்பிக்கையை ஏற்படுத்தி அதன் மூலம் முதலீட்டை அதிகரிக்கிறது
5) நிறுமத்தின் மூலதன செலவினை குறைக்கிறது
6) பங்கு விலையில் நேர்மறை தாக்கத்தை கொண்டுள்ளது
7) இலக்கினை அடையும் பொழுது உரிய ஊக்க ஊதியம் கிடைக்க வழிவகை செய்கிறது
8) நிறுவனத்தின் மீது மக்களின் நம்பிக்கையை ஏற்படுத்துகிறது
9) வள ஆதாரங்களை சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்ய உதவுகிறது
10) தொழில் நெறிமுறைகளை வலுப்படுத்துகிறது

73. அதிகரித்து வரும் பன்னாட்டு நிறுவனங்களின் பலன்களை விவரி.

I. தரமான பொருட்கள்
   - பன்னாட்டு நிறுவனங்களை வளங்கள், அனுபவம் , ஆராய்ச்சி போன்றவற்றின் மூலம் தரமான பொருட்களை அளிக்கிறது

II. வாழ்க்கை தரம் உயருகிறது
   - தரமான பொருட்களை அளிப்பதால் மக்களின் வாழ்க்கை தரம் உயருகிறது

III. நாட்டின் செலாவணி செலுத்துநிலை வளர்ச்சி
   - பன்னாட்டு நிறுவனங்கள் ஏற்றுமதியை அதிகப்படுத்துகின்றன
   - இதனால் நாட்டின் செலுத்துநிலை மேம்படுகிறது

IV. தொழில்நுட்ப வளர்ச்சி
   - தொழில்நுட்ப வளர்ச்சியை ஒரு நாட்டிலிருந்து வேறு நாட்டிற்க்கு மாற்றுவதன் மூலம் வளரும் நாடுகளில் தொழில் நுட்ப வளர்ச்சியின் பலனை பெறமுடிகிறது

V. பயன்படுத்தப்படாத வளங்களை முறையாக பயன்படுத்துதல்
   - தனது சிறப்பு தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி பன்னாட்டு நிறுவனங்கள் பயன்படுத்தாத வளங்களை முறையாக பயன்படுத்தி நாட்டின் தேசிய வருமானத்தை உயர்த்துகிறது

74. இந்தியாவில் உள்ள நிறுவனங்களின் ~~வேலைவாய்ப்புகள்~~ செயல்பாடுகள் பற்றி சர்வதேச தர நிர்ணயத்தின் பங்கு பற்றி விவாதிக்கவும்.

Discuss the role of International Benchmarking on the working of Companies in India

- ஆசியா
  - நிர்வாக குழுவில் தனி இயக்குநர்கள்[சுதந்திர தன்மை உடையவர்கள்] மூன்றில் ஒரு பங்கு அவசியம்

- ❖ சீனாவில் தணிக்கை குழு மூலமே தனி இயக்குநர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்
- ➢ அமெரிக்க ஐக்கிய நாடுகள்
    - ❖ நிர்வாக குழுவில் தனி இயக்குநர்கள்[சுதந்திர தன்மை உடையவர்கள்] மூன்றில் இரு பங்கு அவசியம்
    - ❖ நிறுவன ஆளுகை குழு தேசிய நிறுவன ஆளுகை கழகம் [NACD] பரிந்துரைப்படி அமர்தப்படுகிறது
    - ❖ குழு தனது அன்றாட செயல் திறனை மதிப்பிடுதல் வேண்டும்
- ➢ ஐரோப்பா
    - ❖ ஐரோப்பிய ஆணைக் குழு தனது உறுப்புநாடுகளில் இயங்கி வரும் நிறுமங்களில் சுதந்திரமான நிர்வாகம் நடைபெர சார்பற்று செயல்படும் மேற்பார்வை இயக்குநர்களை போதுமான அளவு சேர்க்க வேண்டும் என கூறுகிறது
- ➢ கனடா
    - ❖ கனடா அரசு தாக்கல் செய்துள்ள மசோதாவின் படி நிறுமங்கள் மற்றும் வங்கிகளின் குழு உறுப்பினர்களில் 40% பெண்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்
- ➢ பிரான்ஸ்
    - ❖ 50 மில்லியன் விற்றுமுதல் கொண்ட பொது நிறுமங்கள் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்கவேண்டும்
    - ❖ மேலும் குழுக்களில் பெண்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டும்

75. பல்வேறு நிதி ஆதாரங்களை வகைப்படுத்தி பட்டியலிடுக.

1. குறுகிய கால நிதி
    - ➢ ஒரு வருடத்திற்குள் தேவைப்படும் நிதி குறுகிய கால நிதியாகும்
    - ➢ குறுகிய கால நிதியில் பின்வருபவை அடங்கும்
        - ➢ கடன்கள் மற்றும் முன்பணம்
        - ➢ வங்கி மேல்வரைப்பற்று
        - ➢ மாற்றுச் சீட்டை தள்ளுபடி செய்தல்
        - ➢ வியாபார கடன்
        - ➢ அடகு கடன்
        - ➢ பந்தக கடன்
        - ➢ அடமான கடன்[ அசையா சொத்தின் மீது]
        - ➢ பிணைய கடன்
        - ➢ வணிகத்தாள்

- ➢ வாடகை கொள்முதல் நிதி
- ➢ கடன் வசூல் முகைமை

2. நடுத்தர கால நிதி
   - ➢ ஒரு ஆண்டிற்கு மேல் ஐந்து ஆண்டிற்குள் தேவைப்படும் நிதி நடுத்தர கால நிதி ஆகும்
   - ➢ நடுத்தர கால நிதியில் பின்வருபவை அடங்கும்
     - ❖ வங்கிகடன்
     - ❖ நிதி நிறுவனக்கடன்
     - ❖ குத்தகை நிதி
3. நீண்ட கால நிதி
   - ➢ ஐந்து ஆண்டிற்கு மேல் தேவைப்படும் நிதி நீண்ட கால நிதி ஆகும்
   - ➢ நீண்ட கால நிதியில் பின்வருபவை அடங்கும்
     - ❖ பங்குகள் வெளியீடு
     - ❖ கடன் பத்திரங்கள்
     - ❖ இருத்திவைக்கப்பட்ட ஆதாயம்
     - ❖ பொது வைப்பு
     - ❖ வணிக வங்கிகளிடமிருந்து பெறும் நீண்ட கால கடன்
     - ❖ நிதி நிறுவன கடன்

76. வணிக வங்கிகளால் வழங்கப்படும் குறுகிய கால நிதி ஆதாரங்களை சுருக்கமாக விளக்குக

1. வங்கி மேல்வரைப்பற்று
   - ➢ வங்கியில் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு உட்பட்டு ஒரு வாடிக்கையாளரின் வங்கி நடப்புக்கணக்கில் வரவில் இருக்கும் தொகையை விட அதிகமான தொகையை எடுத்து பயன்படுத்திக் கொள்ளும் ஒர் ஏற்பாடு வங்கி மேல்வரைப் பற்று ஆகும்
2. அடகு கடன்
   - ➢ கடன் பெறுநர் அவசர நிதித் தேவையை பூர்த்தி செய்து கொள்ள தனக்கு சொந்தமான பொருளை கடன் வழங்குநரிடம் அடகு வைத்து பெறும் கடன் அடகு கடன் ஆகும்
3. பந்தகக் கடன்
   - ➢ அசையும் சொத்துகளின் முல ஆவணங்களை கடன் கொடுப்பவரிடம் அடகு வைத்து பெறப்படும் கடன் பந்தக கடன் ஆகும்
   - ➢ உதாரணம் காரின் பதிவு சான்றிதலை வைத்து பெறப்படும் கடன்

4. அடமானக் கடன்
    - அசையா சொத்தினை ஈடாக வைத்து பெறப்படும் கடன்
    - நிறுவனத்தின் நிலம் மற்றும் கட்டிடத்தை அடமானமாக வைத்து பெறப்படும் கடன்
5. பிணையமற்ற கடன்/ தூய கடன்
6. எவ்விதமான ஆவணங்களையும் பிணையமாக பெறாமல் கடன் பெறுநரின் குணநலன், திறமை ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு அளிக்கப்படும் கடன் பிணையமற்ற கடன்/ தூய கடன் ஆகும்

77. குறிப்பு வரைக

அ) இருத்திவைக்கப்பட்ட ஆதாயம்

- நிறுமம் தான் ஈட்டிய இலாபம் முழுவதும் பங்குநர்களுக்கு பிரித்து அளிக்காமல் அவற்றின் ஒரு பகுதியை நிறுவனத்தின் வளர்ச்சிக்காக சேமித்து முதலீடு செய்யும்
- அவ்வாறு பங்குநர் தராமல் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள இலாபத்தின் ஒரு பகுதி இருத்தி வைக்கப்பட்ட ஆதாயம் ஆகும்

ஆ) குத்தகை நிதி

- குத்தகை நிதி என்பது தேவைப்படும் சொத்துகளை குத்தகைக்கு எடுத்து உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் செயலை குறிக்கும்
- தொடக்க நிலையில் உள்ள சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இம்முறையை பயன்படுத்துகின்றன

78. குறிப்பு வரைக

அ) உரிமையாளர் நிதி

- நிறுவனங்களின் உரிமையாளரால் வழங்கப்படும் நிதி உரிமையாளர் நிதி ஆகும்
- உரிமையாளர் நிதியில் அடங்குபவை
    - பங்கு முதல்
    - இருத்தி வைக்கப்பட்ட ஆதாயத்தை மறு முதலீடு செய்தல்

ஆ) கடனாக பெறப்பட்ட நிதிகள்

- கடனாக பெறப்பட்ட நிதிகள் என்பது கடன் அல்லது புற மூலங்களினால் பெறப்பட்ட நிதிகளை குறிக்கிறது
- உதாரணம்
    - கடன் பத்திரம்
    - வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்
    - பொது வைப்பு

- ❖ தொழில் கடன்
- ❖ குத்தகை நிதி
- ❖ வணிகத்தாள்
- ❖ கடன் வசூல் முகைமை

79. ஏதேனும் நான்கு தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.

1. பொது வருங்கால வைப்பு நிதி
   - ❖ மிகப்பாதுகாப்பான நீண்ட கால முதலீட்டு வாய்ப்பு
   - ❖ வருமான வரி விலக்கு உண்டு
   - ❖ 15 ஆண்டுகளுக்கு செலுத்திய திரும்ப பெற முடியாது
2. பரஸ்பர நிதி
   - ❖ பரஸ்பர நிதி என்பது நிதி நிறுமங்கள் பொதுமக்களிடமிருந்து பல்வேறு பரஸ்பர நிதித்திட்டங்கள் மூலமாக திரட்டிய பணத்தை பங்கு சந்தையில் முதலீடு செய்து அவை ஈட்டும் இலாபத்தை முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்தளிக்கும் ஏற்பாடாகும்
3. அசையா சொத்தில் முதலீடு செய்தல்
   - ❖ ஒரு வீட்டுமனை அல்லது அடுக்குமாடி குடியிருப்பு போன்ற அசையா சொத்தில் தனி நபர் முதலீடு செய்யலாம்
   - ❖ அசையா சொத்தினை வாங்கும் முன்பு உரிமை பத்திரத்தின் உண்மை தன்மையை கண்டறிதல் அவசியம்
4. கடன் பத்திரங்கள்
   - ❖ பொது வரையறு நிறுமத்தால் வெளியிடப்படும் கடன் பத்திரத்தில் முதலீடு செய்யலாம்
   - ❖ வங்கி வைப்பில் கிடைக்கும் வட்டியை விட கூடுதலாக வட்டி கிடைக்க வாய்ப்பு உண்டு

80. பன்னாட்டு நிதியின் முக்கியத்துவத்தை விவரி?

- ➢ பல்வேறு நாடுகளின் நாணய ஒப்பீடு மதிப்புகளையும் மற்றும் அதன் மாற்று விகிதங்களை நிர்ணயிக்க உதவுகிறது
- ➢ பல்வேறு நாடுகளின் பணவீக்க விகிதங்களை ஒப்பீடு செய்து எந்த நாட்டு பத்திரங்களில் முதலீடு செய்வது என்ற முடிவை எடுக்க உதவுகிறது
- ➢ பல்வேறு நாடுகளின் பொருளாதார நிலைமைகளை அறிந்து கொள்ளவும், மற்றும் சந்தை நிலவரங்களை தெரிந்து கொள்ளவும் உதவுகிறது

- பண்ணாட்டு நிதியியல் தர அறிக்கையின்(IFRS) மூலம் பல்வேறு நாடுகளின் நிதி அறிக்கையினை ஒப்பாய்வு செய்ய உதவுகிறது
- பன்னாட்டு நிதி அமைப்புகளின் அடிப்படை கட்டமைப்புகளை அறிந்து கொள்ளவும், அவற்றிற்கிடையேயான சீர்நிலை பராமரிக்கவும் உதவுகிறது

81. உலகளாவிய வைப்பு இரசீதிற்கும் அமெரிக்க வைப்பு இரசீதிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

| வ.எண் | அடிப்படை | உலகளாவிய வைப்பு இரசீது | அமெரிக்க வைப்பு இரசீது |
|---|---|---|---|
| 1 | மதிப்பீடு | எந்த நாட்டு பணத்திலும் | அமெரிக்க நாட்டு பணத்தில் மட்டும் |
| 2 | யாருக்கு இது வெளியிடப்படும் | பல்வேறு நாடுகளில் உள்ள முதலீட்டாளர்களுக்கு | அமெரிக்க குடிமகனாக உள்ள முதலீட்டாளர்களுக்கு பட்டும் |
| 3 | பட்டியலிடுதல் | அமெரிக்க தவிர்த்த பிற பங்கு மாற்றகங்கள் | அமெரிக்க பங்கு மாற்றகம் மட்டும் |
| 4 | மாற்றுகை தன்மை | உலகம் முழுவதும் மாற்றக்கூடியது | அமெரிக்காவில் மட்டும் |
| 5 | சந்தை | நிறுவன சந்தை. | சில்லறை முதலீட்டாளர் சந்தை |
| 6 | வெளியீடு | ஐரோப்பாவின் பங்கு சந்தையில் | அமெரிக்க பங்கு சந்தையில் |

82. அந்நிய செலாவணி மாற்று பத்திரத்தின் ஏதேனும் 5 சிறப்புக்கூறுகளை விவரி

- இந்திய நிறுமங்கள் அந்நிய செலாவணியில் வெளியிடும் ஒரு வகைப்பத்திரம்
- இது மாற்றத்தக்க கடன் ஆவணம் ஆகும். இதனுடன் வட்டிக்கான அனுமதி உரிமை ஆணை இணைந்திருக்கும்
- முன்குறித்த விலையில் நேர்மை பங்குகளாக மாற்றிக்கொள்ள முடியும்
- வெளிநாட்டு பங்கு சந்தையில் பட்டியிலிடப்பட்டு வியாபாரம் செய்யப்படும்

- குறிப்பிட்ட காலத்திற்கு பின் நேர்மை பங்குகளாக மாற்றிக்கொள்ள முடியும்

83. அந்நிய நேரடி முதலீட்டின் நன்மைகளை விவரி.

1. தேசிய வருமானத்தை உயர்த்துதல்
   - வளரும் நாடுகளில் பயன்படுத்தாத வளங்களில் முதலீடு செய்வதன் வழியாக அந்நாட்டின் தேசிய வருமானத்தை உயர்த்த உதவுகிறது
2. பாதகமான செலுத்து நிலையை தீர்த்தல்
   - அந்நிய நேரடி முதலீடு ஒரு நாட்டிற்கு அயல்நாட்டு செலாவணியை பெற்றுதருகிறது
   - இதனால் அந்நாட்டின் பாதகமான செலுத்துநிலையை தீர்க்க உதவுகிறது
3. பொருளாதார முன்னேற்றத்தை துரிதப்படுத்துதல்
   - அந்நிய நேரடி முதலீடு தொழில் நுட்பம், புதிய மேலாண்மை திறன், சந்தியிடுகை திறன் ஆகியவற்றை முதலீடு செய்யும் நாட்டிற்க்கு கொண்டு வருகிறது
   - இவை வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதார முன்னெற்றத்தை துரிதப்படுத்துகிறது
4. வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்
   - வளர்ந்து வரும் நாடுகளில் அந்நிய நேரடி முதலீடு, உயர்திறன் தேவைப்படும் பணிகளில் ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது
5. வரவேற்கும் நாட்டில் போட்டியை ஊக்குவித்தல்
   - அந்நிய நேரடி முதலீட்டை வரவேற்கும் நாடுகளில் ஆரோக்கியமான போட்டியை உருவாக்குகிறது

84. குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் -வரையறை தருக

அ. உற்பத்தி தொழில் நிறுவனங்கள்

- நிறுவனங்கள் ( அபிவிருத்தி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் 1951இன் படி முதலாம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தொழில்துறை தொடர்பான உற்பத்தி மற்றும் உற்பத்தி பொருட்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை குறிக்கிறது
- இவை இயந்திரம் மற்றும் தளவாடங்களில் செய்யப்படும் முதலீடுகளின் உச்ச வரம்பின் அடிப்படையில் பிரிக்கப்படுகிறது

ஆ. சேவை நிறுவனங்கள்

- சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் பணிச்சேவை சார்ந்த நிறுவனங்களாகும்

85. குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் முக்கியத்துவத்தை விளக்குக

1. அதிக வேலை வாய்ப்புகள்
   - பெரிய நிறுவனங்களை காட்டிலும் இந்நிறுவனங்கள் அதிக வேலைவாய்ப்பினை உருவாக்குகின்றன
2. குறந்த உற்பத்தி செலவு
   - இந்நிறுமங்கள் குறைந்த ஊதியத்தில் பணியாளர்களை நியமிப்பதால் உற்பத்தி செலவுகள் குறைகிறது
3. குறைந்த முதலீடு
   - இந்நிறுவனங்களை தோற்றுவிக்க பேரளவு முதல் தேவை இல்லை
   - குறைந்த அளவு முதல் போதுமானது
4. விரைந்து முடிவெடுத்தல்
   - நிறுவனத்தின் உரிமையாளர்களே நிர்வாகம் செய்வதால் விரைவாக முடிவு எடுக்க முடிகிறது
5. பங்களிப்பு உதவி
   - பெரு நிறுவனங்களுக்கு தேவைப்படும் உதிரி பாகங்கள் மற்றும் பிற பொருட்களை உற்பத்தி செய்து பேரளவு உற்பத்திக்கு உதவுகிறது
6. சமுதாயத்தில் பொருளாதார சமநிலையை உருவாக்குகிறது
7. அனைத்து பகுதிகளிலும் சமமாக வளர்ச்சி பெற உதவுகிறது
8. சுய வேலைவாய்ப்பை உருவாக்கி சுய சார்பை மேம்படுத்துகிறது

86. சுய உதவிக்குழுக்களின் நோக்கங்கள் யாவை?

1. பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை ஊக்குவிப்பது
2. முறைசாரா கடன் கொடுப்போரின் பிடியிலிருந்து மக்களை மீட்டல்
3. பெண்களின் திறமையை ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் ஈடுபடுத்துதல்
4. பின் தங்கிய மக்களிடையே சேமிப்பு பழக்கத்தை உருவாக்குதல்
5. பெண்களிடம் தொழில் முனைவோருக்கான திறமைகளை வளர்த்தல்
6. சுழல் நிதி மற்றும் சுழற்ச்சி கடன் ஆகியவற்றை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்
7. உறுப்பினர்களின் குடும்ப பொருளாதார நிலையை உயர்த்துதல்
8. எதிர்கால பொருளாதார அதிகார மேலாண்மைக்கான திறனை வளர்த்தல்
9. கடன் தொடர்புடைய வசதிகளை ஏற்படுத்துதல்

10. சமூக பொருளாதார தடைகளை வெற்றியுடன் எதிர்கொள்ள அவர்களை தயார்படுத்துதல்

87. உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை?

1. ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும்
2. உள்நாட்டு நாணயத்தில் பொருட்கள் பரிமாற்றம்
3. போக்குவரத்து இடர்பாடு பன்னாட்டு வியாபாரத்தை விட குறைவு
4. உள்நாட்டு வியாபார நடைமுறை விதிகள் மற்றும் சட்டங்கள்
5. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களில் வணிகம்
6. அத்தியாவசிய பொருட்களை சிக்கனமாக வழங்கப்படும்
7. உள்நாட்டில் தோற்றுவிக்கப்பட்ட வியாபார அமைப்புகள் மற்றும் தனி நபர்களிடம் பொருட்கள் வாங்குதல்
8. உள்நாட்டு போக்குவரத்து சாதனங்கள் மூலம் பொருட்கள் விநியோகம்
9. இறக்குமதி வரி , சுங்க வரி போன்றவை கிடையாது
10. மத்திய மற்றும் மாநில அரசால் விதிக்கப்படும் வரிகள் மட்டும்

88. வெளிநாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகளை விவரி?

1. ஏற்றுமதி
   - உள்நாட்டு உற்பத்தி பொருள்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வது எற்றுமதி ஆகும்
2. இறக்குமதி
   - உள்நாட்டு தேவைக்காக வெளிநாட்டிலிருந்து பொருட்களை வாங்குவது இறக்குமதி ஆகும்
3. மறு ஏற்றுமதி

- ஒரு நாட்டில் இருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு அவற்றை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது மறு ஏற்றுமதி ஆகும்

89. சில்லறை வியாபாரிகளின் பண்பு நலன்கள் யாவை?

1. பல்வேறு பொருட்களில் வணிகம்
2. மொத்த வியாபாரியிடம் மொத்தமாக கொள்முதல் செய்து நுகர்வோருக்கு சிறிய அளவில் விற்பனை
3. நுகர்வோருக்கு மிக அருகில் சில்லறை விற்பனையகம்
4. பொதுவாக மொத்த வியாபாரியிடம் கடன் அடிப்படையில் கொள்முதல், நுகர்வோர்க்கு ரொக்க அடிப்படையில் விற்பனை

5. உற்பத்தியாளரிடமிருந்து விலகியும் நுகர்வோரிடம் நெருக்கமாகவும் இருப்பார்

90. மொத்த வியாபாரிகளின் பணிகள் யாவை?

I. பொருட்களை ஒன்று திரட்டுதல்
உற்பத்தியாளர் மற்றும் தயாரிப்பளார்களிடமிருந்து மொத்த வியாபாரிகள் பல்வேறு வகையான பொருட்களை வாங்கி ஒன்று திரட்டுகின்றனர்

II. பொருட்களை இருப்பு வைத்தல்
உற்பத்தியாளரிடம் வாங்கிய பொருட்களை விற்பனை வரை அதன் தரம் குறையாமல் பண்டக காப்பு மூல இருப்பு வைத்து விற்பனை செய்கின்றனர்

III. விநியோகம்
மொத்த வியாபாரி நாடெங்கிலும் உள்ள சில்லறை வியாபாரிகளுக்கு பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் திறம் பட விநியோகிக்கும் பணியை மேற்கொள்கின்றனர்

IV. நிதி வசதி அளித்தல்
- மொத்த வியாபாரி உற்பத்தியாளருக்கும் தயாரிப்பாளருக்கும் முன்பணம் அளிப்பதன் மூலம் நிதி வசதி அளிக்கிறார்
- சில்லறை வியாபாரிகளுக்கு கடன் விற்பனையின் மூலம் நிதி வசதி அளிக்கிறார்

V. இடர் ஏற்பு
உற்பத்தி செய்யப்பட்ட பொருளை வாங்கி பண்டகக் காப்பு செய்வதன் மூலம் விலை வீழ்ச்சி, பொருட்களின் அழிவு போன்ற இடர்களை ஏற்கிறார்

VI. தரப்படுத்துதல், சிப்பம் கட்டுதல், கட்டுமம் செய்தல்

VII. விற்பனைக்கு ஏற்ற முறையில் மொத்த வியாபாரி தரப்படுத்துதல், சிப்பம் கட்டுதல், கட்டுமம் செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்கிறார்

VIII. சந்தை நிலவரங்களை தருதல்
பொருள்களின் சந்தை நிலவரங்களை உற்பத்தியாளர், மற்றும் சில்லறை வியாபாரிகளுக்கு அளிக்கிறார்

IX. போக்குவரத்து வசதி அளித்தல்

மொத்த வியாபாரி சில்லறை வியாபாரியின் இடத்திற்கே பொருட்களை அளித்து போக்குவரத்து தடையை நீக்குகிறார்

91. சில்லறை வியாபாரிகளின் பணிகள் யாவை?

1. வாங்குதல்
    - நுகர்வோரின் தேவைக்கு ஏற்ற பொருட்களை பல்வேறு மொத்த வியாபாரிகளிடமிருந்து வாங்குகிறார்
2. இருப்பு வைத்தல்
    - பொருட்களை விற்பனைக்கு தாயர் நிலையில் காட்சிக்கு வைத்திருக்கிறார்
3. வகைப்படுத்துதல் மற்றும் கட்டுமம் செய்தல்
    - உற்பத்தியாளர் மற்றும் மொத்த வியாபாரியால் வகைப்படுத்தாத மற்றும் கட்டுமம் செய்யப்படாத பொருட்களை வகைப்படுத்தி கட்டுமம் செய்கிறார்
4. இடர் ஏற்றல்
    - நுகர்வோருக்காக பொருட்களை இருப்பில் வைத்திருக்கும் போது ஏற்படும் இடர்களை ஏற்று கொள்கிறார்
5. விற்பனை செய்தல்
    - மொத்த வியாபாரியிடம் மொத்தமாக கொள்முதல் செய்து நுகர்வோருக்கு சிறிய அளவில் விற்பனை செய்கிறார்
6. போக்குவரத்து செய்தல்
    - உற்பத்தியாளர் மற்றும் மொத்த வியாபாரிகளிடமிருந்து தமது இடத்திற்கு பொருட்களை கொண்டு செல்வதன் மூலம் போக்குவரத்து பணியினை மேற்கொள்கிறார்

92. சில்லறை வியாபாரிகளுக்கு மொத்த வியாபாரிகள் ஆற்றிடும் பணிகள் யாவை?

1. நிதி வசதி அளித்தல்
    - சில்லறை வியாபரிக்கு கடன் விற்பனையின் மூலம் நிதிவசதி அளிக்கிறார்
2. தேவையை பூர்த்தி செய்தல்
    - சில்லறை வியாபாரியின் தேவைக்கு ஏற்ப சிறிய அளவில் விற்பனை செய்து அவர்களின் தேவையை பூர்த்தி செய்கிறார்
3. புதிய பொருட்களை அறிமுகம் செய்தல்

- புதிய பொருட்கள் மற்றும் அவற்றின் உபயோகம் குறித்த தகவல்களை சில்லறை வியாபாரியின் கவனத்திற்கு கொண்டு செல்கிறார்

4. விலை நிலைப்பாடு
   - சந்தையின் தேவையை அறிந்து அதற்கேற்ப அளிப்பினை கட்டுப்படுத்துவதால் விலை வேறுபாட்டின் மூலம் சில்லறை வியாபாரிக்கு ஏற்படும் நட்டத்தினை தவிர்க்கிறார்
5. போக்குவரத்து சிக்கனம்
   - சில்லறை வியாபாரியின் இடத்திற்கே பொருட்களை கொண்டு சென்று வழங்குவதன் மூலம் சில்லறை வியாபாரியின் நேரத்தையும் போக்குவரத்து செலவையும் மிச்சப்படுத்துகிறார்

93. நுகர்வோர்களுக்குச் சில்லறை வியாபாரிகளுக்கு ஆற்றிடும் சேவைகள் யாவை?

1. தொடர் அளிப்பு
   - நுகர்வோரின் தேவைக்கு ஏற்ற பொருட்களை பல்வேறு மொத்த வியாபாரிகளிடமிருந்து வாங்கி இருப்பு வைத்து கொள்வதன் மூலம் நுகர்வோருக்கு தேவையான பொருள்களை தொடர்ந்து அளிக்கிறார்
2. புதிய பொருட்கள் பற்றிய தகவல்கள்
   - புதிய பொருட்கள் மற்றும் அவற்றின் உபயோகம் குறித்த தகவல்களை நுகர்வோரின் கவனத்திற்கு கொண்டு செல்கிறார்
3. கடன் வசதிகள்
   - நுகர்வோருக்கு கடன் விற்பனையின் மூலம் கடன்வசதி அளிக்கிறார்
4. தேர்ந்தெடுத்து வாங்கும் வசதிகள்
   - பல்வேறு பொருட்களை இருப்பு வைத்திருப்பதன் மூலம் நுகர்வோருக்கு தேர்ந்தெடுத்து வாங்கும் வசதிகளை அளிக்கிறார்
5. இதர சேவைகள்

   அ. விற்பனைக்கு பிந்தைய சேவை

   ஆ. ரொக்க கழிவு வழங்குதல்

   இ. பொருட்களை வாடிக்கயாளர் இருப்பிடத்திற்கே சென்று வழங்குதல்

94. வழங்கல் வழியினைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

- உற்பத்தி காரணி
  - ✓ உற்பத்தி பொருட்களின் தன்மை மற்றும் வகைகள் வழங்கல் வழியை தீர்மானிக்கின்றன

- ❖ சந்தை காரணி
  - ✓ சந்தையின் தன்மை மற்றும் வகைகள் வழங்கல் வழியை தீர்மானிக்கின்றன
  - ✓ அதிக இடங்களில் விற்க வேண்டிய பொருளுக்கு நீண்ட வழங்கல் வழி தேவைப்படுகிறது
- ❖ நுகர்வோர் காரணி
  - ✓ நுகர்வோர் எண்ணிக்கை வழங்கல் வழியை தீர்மானிக்கும் காரணியாக விளங்குகிறது
  - ✓ நுகர்வோர் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது இடைநிலையர்கள் தேவை
- ❖ இடைநிலையர் காரணி
  - ✓ இடைநிலையருக்கு வழங்கப்படும் விற்பனை கழிவு வழங்கல் வழியை தீர்மானிக்கும் காரணியாகும்
  - ✓ இடைநிலையருக்கு கழிவு அதிகம் தரப்பட்டால் விற்பனை விலை உயரும்
- ❖ உற்பத்தியாளர் காரணி
  - ✓ உற்பத்தியாளரின் நிதி நிலை வழங்கல் வழியை தீர்மாணிக்கிறது
  - ✓ நிதி வசதி குறைவாக உள்ள உற்பத்தியாளர் இடைநிலையரை சார்ந்து இருப்பார்

95. துறைவாரிப் பண்டகசாலையின் சிறப்பியல்புகளை குறிப்பிடுக

1. பேரளவு அமைப்பு
   - ➢ அதிக முதலுடன் தொடங்கப்படும் பெரிய சில்லறை வியாபார நிறுவனம் ஆகும்
2. பல்பொருள் விற்பனை
   - ➢ நுகர்வோருக்கு தேவையான அனைத்து வகைப்பொருட்களும் ஒரு கூறையின் கீழ் கிடைக்கும்
3. துறைகளின் ஒருங்கிணைப்பு
   - ➢ பல்வேறு துறைகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு துறையும் ஒவ்வொரு வகையான பொருட்களை தனித்தனியாக விற்பனை செய்கின்றன்
4. வாங்கும் வசதிகள்

- வாடிக்கையாளர்களுக்கு தேவையான் சிற்றுண்டி சாலை, பொழுது போக்கு வசதிகள், வாகன நிறுத்தும் இடம் போன்ற வாங்கும் வசதிகளை வழங்குகிறது

5. மையக்கொள்முதல்
   - நிறுவத்திற்கு தேவையான பொருள்களை ஒரு மையத்தின் வழியாக பேரளவு கொள்முதல் செய்யப்படுகிறது

96. நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலை என்றால் என்ன?அதன் நன்மைகள் யாவை?

- பொதுநல அடிப்படையில்கொள்முதல் செய்துசிக்கனப்படுத்தியும் பொதுவாக விற்பதன் மூலம் அதிக அளவு சேர்த்து வைத்துகொள்ளும் நோக்குடனும் ஒன்றுபடும் நபர்களின் சேர்க்கையே கூட்டுறவு வழங்கல் சங்கம் - **ஜே ஸ்டீபன்சன்**
- **நன்மைகள்**
  1. ஒரு நபர் ஒரு வாக்கு முறை பின்பற்றி மக்களாட்சி முறையில் மேலாண்மை செய்யப்படுகிறது
  2. கட்டுப்பட்டு பொருட்கள் எளிதில் கிடைக்கிறது
  3. அரசின் ஆதரவு உண்டு
  4. ரொக்கத்தின் அடிப்படையில் விற்பனை நடைபெறுவதால் வாரக்கடன் தவிர்க்கப்படுகிறது

97. உள்நாட்டு வியாபாரத்தில் தொழில் வர்த்தகச் சங்கங்களின் பங்கினை விவரி

- மாநிலங்களுக்கிடையே போக்குவரத்து விதிமுறைகள், நெடுஞ்சாலைகள், சரக்கு பரிமாற்றத்திற்கான வசதிகளை உருவாக்குதல்
- CGST மற்றும் SGST வரிகளை ஒருங்கிணைத்தல்
- வேளாண் பொருட்கள் மற்றும் அதனை சார்ந்த பொருட்கள் விற்பனைக்கு திட்டமிட்டு அரசுகளுக்கு ஆலோசனை வழங்குதல்
- சரியான அளவுகள், கலப்படம் போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்
- அரசுடன் பேசி மின்சாரம், சாலை வசதி துறைமுகம் போன்றவற்றை விரிவாக்கம் செய்தல்

98. பன்னாட்டு வணிகத்தின் நன்மைகள் யாவை?

1. நிலவியல் சிறப்பு தேர்ச்சி
2. இயற்கை வளங்களை முழுமையாக பயன்படுத்துதல்
3. பொருளாதார வளர்ச்சி
4. வேலைவாய்ப்பை உருவாக்குதல்

5. வாழ்க்கை தரம் மேம்படுதல்
6. விலை சமனிலைப்படுத்துதல்
7. அதிக இலாபத்திற்கான வாய்ப்பு
8. முழுத்திறணையும் பயன்படுத்துதல்
9. பன்னாட்டு அமைதி
10. போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு வளர்ச்சியடைதல்

99. பன்னாட்டு வணிகத்தின் குறைபாடுகள் யாவை?

1. சுய பொருளாதார சார்பு இன்மை
2. உள்நாட்டுத்தொழில்களின் வளர்ச்சி பாதிப்பு
3. ஆபத்து விளைவிக்கும் பொருட்களை இறக்குமதி செய்தல்
4. இயற்கை வளங்களை தவறாக பயன்படுத்துதல்
5. அரசியல் சுரண்டல்
6. நாடுகளுக்கிடையே போட்டி
7. கலாச்சார சீரழிவு

**100. பன்னாட்டு வணிகத்தின் சிறப்பு கூறுகளை விளக்குக**

அ. நாடுகளின் பங்கேற்பு

❖ பல்வேறு நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிக நடவடிக்கைகளின் தொகுப்பே பன்னாட்டு வணிகம் ஆகும்

ஆ. அந்நிய செலாவணி பயன்படுத்துதல்

❖ ஒவ்வொரு நாடும் மற்ற நாட்டோடு பொருட்கள் மற்றும் சேவைகளை அயல் நாட்டு நாணய மதிப்பில் பரிமாறிக்கொள்ள வேண்டும்

இ. சட்ட பூர்வ கடமைகள்

❖ அயல்நாட்டு வணிகம் அந்தந்த நாடுகளின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கொள்கைகள் அடிப்படையிலேயே நடைபெறுகிறது

❖ சில வகையான பொருட்களை ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்ய அரசின் அனுமதி வேண்டும்

ஈ. அதிகப்படியான ஆவணங்களை தயாரித்தல்

❖ பன்னாட்டு வணிகத்தில் தொடர்புடைய நபர்கள் அதிகமான ஆவணங்களை தயாரிக்க வேண்டியுள்ளது

உ. வேறுப்படும் பொருளாதார சூழல்

❖ பன்னாட்டு வணிகத்தில் ஈடுபடும் ஒவ்வொரு நாட்டின் பொருளாதார சூழல் ,நிறுவன அமைப்பு, வணிக கொள்கை போன்ற காரணிகளால் பொருளாதார சூழல்கள் வேறுபடுகின்றன்

**101. பன்னாட்டு வணிகத்தின் முக்கியத்துவத்தினை விவரி**

அ. வளங்களின் சமமற்ற பகிர்வு

- ❖ இயற்கை வளங்களின் சமச்சீரற்ற பகிர்வால உலக நாடுகள் பன்னாட்டு வணிகத்தின் மூலம் பொருட்களை பரிமாறிக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது

ஆ. உற்பத்தி காரணிகளின் சீரற்ற கிடைப்பு தன்மை

- ❖ பன்னாட்டு வணிகம் ஒரு நாட்டில் கூடுதலாக உள்ள உற்பத்தி காரணியை தேவையுள்ள மற்ற நாட்டிற்கு மாற்றுவதற்கு பன்னாட்டு வணிகம் வழிவகுக்கிறது

இ. சிறப்பு தேர்ச்சி

- ❖ சில நாடுகள் அல்லது குறிப்பிட்ட நாட்டின் சில பகுதிகள் திறமையான உழைப்பாளிகள், சாதகமான பருவ நிலை , தொழில் நுட்ப அறிவு போன்ற காரணிகளால் அதிகமாக உற்பத்தி செய்யப்படும் பொருள்களை பரிமாற்றம் செய்ய பன்னாட்டு வணிகம் உதவுகிறது

ஈ. அடக்க விலை குறைவு

- ❖ பன்னாட்டு வணிகத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் குறைவான விலையில் பொருட்களை இறக்குமதி செய்து மற்ற நாடுகளுக்கு இலாபகரமான விலையில் ஏற்றுமதி செய்கின்றன

**102. பன்னாட்டு வணிகத்தின் நன்மைகள் யாவை/ விவரி?**

1. நிலவியல் சிறப்பு தேர்ச்சி
   - ❖ ஒவ்வொரு நாடும் தன்னால் உற்பத்தி செய்யக்கூடிய பொருளை உற்பத்தி செய்வதற்கும் பற்றாகுறையான பொருட்களை மற்ற நாடுகளிருந்து வாங்குவதற்கும் வழிவகுக்கிறது
   - ❖ பன்னாட்டு வணிகம் பன்னாட்டு சிறப்பு தேர்ச்சிக்கு உதவுகிறது
2. இயற்கை வளங்களை முழுமையாக பயன்படுத்துதல்
   - ❖ பன்னாட்டு வணிகம் ஒவ்வொரு நாடும் தன்னுடைய இயற்கை வளங்களை முழுமையாக பயன்படுத்த உதவுகிறது
3. பொருளாதார வளர்ச்சி
   - ❖ வளரும் நாடுகள் இயந்திரம், தொழில் நுட்பம் மற்றும் கருவிகள் இறக்குமதி செய்வதன் வாயிலாக விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு பன்னாட்டு வணிகம் உதவுகிறது
4. வேலைவாய்ப்பை உருவாக்குதல்
   - ❖ பன்னாட்டு வணிகம் வேளாண்மை மற்றும் தொழில் துறையை வளர்ச்சி மற்றும் விரிவடைய செய்வதன் காரணமாக வேலைவாய்ப்பை உருவாக்குகிறது
5. வாழ்க்கை தரம் மேம்படுதல்

- நாடுகளுக்கிடையே சரக்கு மற்றும் சேவை பரிமாற்றம் மூலம் பன்னாட்டு வணிகம் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துகிறது

6. விலை சமனிலைப்படுத்துதல்
   - உலக நாடுகளில் பொருட்களின் விலை அதிக ஏற்றத்தாழ்வு இல்லாமல் இருப்பதற்கு பன்னாட்டு வணிகம் உதவுகிறது
7. அதிக இலாபத்திற்கான வாய்ப்பு
   - அதிக பொருட்கள் உற்பத்தி செய்து அதிக விலைக்கு விற்பதன் மூலம் நிறுவனம் அதிக இலாபம் அடைய பன்னாட்டு வணிகம் உதவுகிறது
8. முழுத்திறனையும் பயன்படுத்துதல்
   - உள்நாட்டு வியாபாரத்தை விட பன்னாட்டு வணிகத்தின் மூலம் உள்நாட்டு தொழிற்சாலை ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக செயல்பட வழிவகுக்கிறது

**103. பன்னாட்டு வணிகத்தின் குறைபாடுகள் யாவை / விவரி?**

8. சுய பொருளாதார சார்பு இன்மை
   - பன்னாட்டு வணிகம் ஒரு நாடு இறக்குமதிக்காக மற்ற நாடுகளை அதிகம் சார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்குகிறது
   - இது அந்நாட்டின் சுய பொருளாதார சார்பை பாதிக்கிறது
9. உள்நாட்டுத்தொழில்களின் வளர்ச்சி பாதிப்பு
   - பன்னாட்டு வணிகம் உள்நாட்டு தொழில்களின் வளர்ச்சியை தடுக்கிறது
10. ஆபத்து விளைவிக்கும் பொருட்களை இறக்குமதி செய்தல்
    - பன்னாட்டு வணிகம் ஆடம்பர பொருட்கள், ஆபத்து விளைவிக்கும் பொருட்கள் ஆகியவற்றை அதிகம் கொள்முதல் செய்ய வழிவகை செய்கிறது
11. இயற்கை வளங்களை தவறாக பயன்படுத்துதல்
    - அரிய இயற்கை வளங்களை அதிகமாக ஏற்றுமதி செய்வதன் மூலம் அவை விரைவாக வெறுமையாகின்றன
    - இதனால் ஏற்றுமதி செய்யும் நாட்டில் சுற்றுச்சூழல் பேரழிவை ஏற்படுத்துகிறது
12. கலாச்சார சீரழிவு
    - பன்னாட்டு வணிகம் நாட்டின் கலாச்சார சீரழிவிற்கு காரணமாக அமைகிறது
    - பழைமையான வாழ்வியல் முறையை அழிக்கிறது

104. உள் நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

| | உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|---|
| 1 | ஒரு நாட்டினுள் நடைபெறும் வியாபாரம் | பல்வேறு நாடுகளுக்கிடையேயான வியாபாரம் |
| 2 | உள்நாட்டிலேயே பொருள் மற்றும் சேவை பரிமாற்றத்தை உள்ளடக்கியது | பல்வேறு நாடுகளுக்கிடையேயான பொருள் மற்றும் சேவை பரிமாற்றத்தை உள்ளடக்கியது |
| 3 | வெவ்வேறு நாடுகளின் பணபரிமாற்றம் ஏதும் இல்லை | வெவ்வேறு நாடுகளின் பணபரிமாற்றம் உண்டு |
| 4 | போக்குவரத்து இடர்பாடு குறைவு | போக்குவரத்து இடர்பாடு மிக அதிகம் |
| 5 | உள் நாட்டு சட்டங்கள் பின்பற்றப்படுகிறது | பல்வேறு நாடுகளின் சட்டங்கள் வழிமுறைகள் பின்பற்றபடுகிறது |

105. ஏற்றுமதி வணிகத்தில் பின்பற்றப்படும் நடைமுறைகள் யாவை?
What are the procedures relating to Export trade?

1. வியாபார விசாரனை
2. சரக்காணை பெறுதல் மற்றும் ஆணையை உறுதிபடுத்துதல்
3. நாணய உறுதி கடிதம் பெறுதல்
4. ஏற்றுமதியாளர் இறக்குமதியாளர் குறியீட்டு எண் பெறுதல்
5. உறுப்பினர் சான்று பெறுதல்
6. பொருட்களை உற்பத்தி செய்தல்/ கொள்முதல் செய்தல்/ கட்டுமம் செய்தல்
7. ஏற்றுமதி சான்று பெறுதல்
8. பொருட்களை காப்பீடு செய்தல்
9. தொற்றுவாய் சான்றிதல் பெறுதல்
10. வாணிக துதுவர் இடாப்பு பெறுதல்
11. அனுப்புகை முகவரை அமர்த்துதல்
12. துறைமுகத்திற்கு சரக்கை அனுப்புதல் மற்றும்முகவருக்கு தகவல் தருதல்
13. அனுப்புகை முகவர் பின்பற்ற வேண்டிய சுங்க நடைமுறைகள்
    அ. துறைமுகநகரத்திலிருந்து சரக்கை பெற்றுக்கொள்ளுதல்
    ஆ. கப்பலிடு ஆணை பெறுதல்
    இ. கப்பல் வாடகை முறி ஏற்படுத்துதல்
14. சரக்கை அகற்றுதல் தொடர்பான சுங்க நடைமுறைகள்
    அ. துறைமுக கட்டணம் செலுத்துதல்
    ஆ. சரக்கை அனுப்ப அனுமதி பெறுதல்

இ. கப்பல் தலைவர் இரசீது பெறுதல்
ஈ. கப்பல் இரசீது

15. வாணிக இடாப்பை தயாரித்தல் மற்றும் வங்கியில் ஆவணங்களை தாக்கல் செய்தல்
16. பணம் பெறுதல்

106. கப்பல் இரசீதிற்கும் கப்பல் வாடகை முறிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

| வ.எண் | அடிப்படை | கப்பல் இரசீது | கப்பல் வாடகை முறி |
|---|---|---|---|
| 1 | பொருள் | கப்பல் இரசீது என்பது குறிப்பிட்ட அளவு சரக்கை பெற்றுக்கொண்டு குறிப்பிட்ட துறைமுகத்தில் சேர்ப்பதை குறிக்க கூடிய ஆவணம் ஆகும் | கப்பல் வாடகை முறி என்பது சரக்கை அனுப்ப மொத்த கப்பலையோ அல்லதுபெரும் கப்பலின் ஒரு பகுதியையோ வாடகைக்கு அமர்த்துவதற்கான உடன்பாடு ஆகும் |
| 2 | மாற்றும் தன்மை | இதை மேலெழுதல் மூலம் மூன்றாம் நபருக்கு மாற்றித்தர முடியும் | இதை மூன்றாம் நபருக்கும் மாற்றித்தர இயலாது |
| 3 | கடன் பெறுதல் | இதை பிணையமாக வைத்து கடன் பெறலாம் | இதை பினையமாக வைத்து கடன் பெறமுடியாது |
| 4 | குத்தகை | இது கப்பலை குத்தகை எடுத்தற்கான ஆதாரம் அல்ல | இது கப்பலை குத்தகை எடுத்தற்கான ஆதாரம் ஆகும் |

107. **ஏற்றுமதி வணிகத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் யாவை?**

What are the documents used in Export Trade?

1. **சரக்கு தொடர்பான ஆவணங்கள்**
   - சரக்காணை
   - தோற்றுவாய் சான்றிதல்
   - ஏற்றுமதி ஆய்வு சான்று

2. **சரக்கு அனுபுகை தொடர்பான ஆவணங்கள்**
   - கப்பல் துணைத்தலைவர் இரசீது
   - கப்பல் சீட்டு

- கப்பல் இரசீது
- கடல் சார் காப்பீட்டு திட்ட ஆவணம்
- வணிக தூதுவர் இடாப்பு
- இரயில் இரசீது/லாரி இரசீது

3. **பணம் செலுத்துகை தொடர்பான ஆவணங்கள்**
    - நாணய உறுதி கடிதம்
    - வாணிக இடாப்பு
    - மாற்றுச்சீட்டு
    - வங்கிச் சான்று செலுத்துகை

108. ஏற்றுமதி ஆணை நிலையத்தின் பணிகளை விளக்கி எழுதுக.

1. உற்பத்தி செய்யப்பட்ட பொருளுக்கான சந்தையை கண்டறிதல்
2. இறக்குமதியாளரை கண்டறிந்து ஏற்றுமதி செய்வதற்கான பதிவை பெறுதல்
3. சரக்கின் வடிவத்தை சந்தை தேவை, தரம், சரக்கை அளிப்பவரின் திறனுக்கு ஏற்றவாறு நிறுவுதல்
4. சரக்கை குறிப்பிட்ட இடத்திற்கு அனுப்ப தயார் செய்தல்
5. சரக்கை வாங்குபவரின் செலுத்துகை திறனை அறிதல்
6. நடவடிக்கைகளை பேசி முடித்தல்
7. சரக்கை காப்பீடு செய்தல்
8. வணிக நடவடிக்கைகளுக்கு நிதியளித்தல்
9. சரக்கு மற்றும் சேவைகளுக்கு தொகை செலுத்துதல்
10. பன்னாட்டு வணிகம் தொடர்புடைய ஆவணங்களை தயாரித்தல்
11. கோருரிமைகளை தீர்வு செய்தல்

109. உலக வர்த்தக அமைப்பின் நோக்கங்கள் யாவை? Point out the objectives of WTO

- உறுப்பு நாடுகளில் உள்ள மக்களின் வாழ்க்கை தரத்தை மேபடுத்துதல்
- உறுப்பு நாடுகளின் நிலையான வளர்ச்சிக்கு உலகின் பல்வேறு வளங்களை தகுந்த முறையில் பயன்படுத்துதல்
- பன்னாட்டு வணிகத்தில் ஒரு ஒருங்கிணைந்த மேலும் நிறைவேற்றத்தக்க மற்றும் நீடித்த வர்த்தக முறையை ஊக்குவிக்க
- பன்னாட்டு அளவில் சரக்குகள் மற்றும் சேவைகளின் வர்த்தகத்தை விரிவாக்கம் செய்ய

- முழு வேலைவாய்ப்பு மற்றும் நீடித்த நிலையான வருமானம் ஆகியவற்றை உறுதி செய்தல்
- சுற்றுச்சூழலை பாதுகாக்க

110. உலக வர்த்தக அமைப்பின் பணிகள் யாவை? Write down the functions of WTO

- இது உறுப்பு நாடுகளில் வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்த்தை மூலம் நிறைவேற்ற உதவுகிறது
- உறுப்பினர் நாடுகளில் எழும் வர்த்தகம் சார்ந்த பிரச்சனைகளை தீர்க்க உதவுகிறது
- வர்த்தக தடைகளை குறைப்பதற்காக இது பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய குறியீடுகளை அமைக்கிறது
- உலக வங்கியுடன் இணைந்து உலகளாவிய பொருளாதார கொள்கைகளை வகுப்பதில் உதவி புரிகிறது
- TRIPS பற்றிய பொது ஒப்பந்தம் தொடர்பான உடன்படிக்கையை இது மேற்பார்வை செய்கிறது
- உறுப்பு நாடுகளுக்கிடையேயான வர்த்தகத்தை இது ஒழுங்குப்படுத்துகிறது

111. உலக வர்த்தக அமைப்பின் நன்மைகள் யாவை? Describe the benefits of WTO

- பன்னாட்டு வர்த்தகத்தை நடத்துவதற்கு ஒரு உகந்த சூழ்நிலையை உருவாக்குகிறது
- உறுப்பினர் நாடுகளில் எழும் வர்த்தகம் சார்ந்த பிரச்சனைகளை தீர்க்க உதவுகிறது
- தடையற்ற வர்த்தகத்தின் மூலம் வருமானத்தை அதிகரித்து மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துகிறது
- இது உறுப்பு நாடுகளுக்கிடையே சுதந்திரமான வர்த்தகம் நடைபெற உதவுகிறது
- உலக வணிக அமைப்பு மண்டல மற்றும் சர்வதேச மாநாட்டை ஒழுங்குபடுத்துகிறது
- தடையற்ற வர்த்தகத்தின் மூலம் உலக மக்கள் பல்வேறு வகையான பொருட்களை வாங்கி ப்யன்படுத்த முடிகிறது

- வர்த்தக தடைகளை குறைத்துள்ளது. இதன் மூலம் மக்களின் வருமானம், தேசிய வருமானம் அதிகரிக்க உதவுகிறது
- உறுப்பினர் நாடுகளுக்கு வர்த்தக உடன்படிக்கை ஒன்றை உருவாக்குவதற்கான ஒரு தளத்தை வழங்குகிறது

112. **உலக வங்கி/ மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான பன்னாட்டு வங்கியின் பணிகள் யாவை?**

Highlights the functions of IBRD

- போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளில் புனரமைப்புக்கு உதவுதல்
- பொருளாதார வளர்ச்சி மற்றும் பன்னாட்டு வணிகத்தின் சீரான வளர்ச்சியை ஊக்குவித்தல்
- உறுப்பினர் நாடுகளில் திறனேற்றம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஊக்குவித்தல் மற்றும் வளர்த்தல்
- போதுமான வளங்களை வழங்குவதன் மூலம் வளரும் நாடுகளில் விவசாய மற்றும் தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவித்தல்
- உறுப்பினர் நாடுகளில் சுகாதாரம், கல்வி மற்றும் சிறிய அளவிலான நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கு தேவையான வளங்களை வழங்குதல்
- உறுப்பினர் நாடுகளில் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துதல்

113. **பன்னாட்டு நணய நிதியத்தின் பணியகள் யாவை?**

Write down the functions of IMF

- குறுகிய கால கடன் வழங்கும் நிறுவனமாக செயல்படுகிறது
- இது பரிமாற்ற விகிதங்களின் சாதாரண சரிகட்டுதல்களை செய்வதற்க்கு உதவுகிறது
- இது உறுப்பு நாடுகளின் நாணயங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அதிலிருந்து கடன் வாங்கக்கூடிய உறுப்பினர் நாடுகள் நாணய மதிப்பை பெற்றுக்கொள்ளலாம்
- நல்ல வலுவான பொருளாதார மற்றும் நிதிக்கொள்கையை பின்பற்றும் நாடுகளுக்கு பொருளாதார நிலைத்தன்மை மற்றும் உலகளாவிய வளர்ச்சிக்கு வழி வகுக்கிறது
- வங்கியியல், நிதி, நாணய மற்றும் பரிமாற்ற கொள்கைகளை வடிவமைப்பதில் தொழில்நுட்ப உதவி வழங்கப்படுகிறது
- உறுப்பினர் நாடுகளில் வாணிக சமநிலையில் ஏற்படும் சம்மற்ற தன்மையை சரி செய்ய உதவுகிறது

114. பன்னாட்டு நாணய நிதியம் மூலம் இந்திய அடைந்த பலன்களை விவரி?

Explain how far India has benefited from IMF

1. இந்திய ரூபாயின் எளிமையான மாற்றீடு
    - பன்னாட்டு நாணய நிதியம் உருவாக்கப்பட்ட பின்னர் இந்திய ரூபாயின் மதிப்பு தனித்துவம் பெற்று விளங்குகிறது

2. வளர்ச்சி நடவடிக்கைகளுக்கான கடன்
    - பல வளர்ச்சி திட்டங்களுக்கு பல வகையான கடன் வசதிகளை இந்தியா பெற்றுள்ளது

3. வெளிநாட்டு நாணயத்தை வாங்குவதற்கான திறன்
    - வளர்ந்து வரும் தேவையை பூர்த்தி செய்ய இந்திய அரசாங்கம் வெளிநாட்டு நாணயங்களை அவ்வப்போது வாங்குகிறது

4. நிபுணர் ஆலோசனை
    - பொருளாதர பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆலோசனையை இந்தியா பெற்று வருகிறது

5. சரியான உதவி
    - வாணிக செலுத்து நிலையில் ஏற்படும் பற்றாகுறையை தற்காலிகமாக அகற்றுவதற்குப் பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து சரியான நேரத்தில் உதவி பெற்றுள்ளது

6. இயற்கை பேரழிவின் போது நிதி உதவி
    - இயற்கை பேரழிவு, சீனா மற்றும் பாகிஸ்தானின் ஆக்கிறமிப்பின் போது ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து நிதி உதவி பெற்று சமாளித்துள்ளது

115. மூலதன கணக்கின் கட்டமைப்பை விளக்குக

- **தனியார் மூலதனம்**
- ❖ அயல்நாட்டு முதலீடுகள்
- ❖ நீண்ட கால கடன்கள்
- ❖ அயல்நாட்டு நாணய வைப்பு

- **வங்கி மூலதனம்**
- அந்நிய செலாவணியை கையாள அதிகாரம் கொண்ட வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகளின் வெளிப்புற நிதி சார்ந்த சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் அளவு, வங்கி மூலதனத்தில் அடங்குகிறது
- **அலுவல் சார்ந்த மூலதனம்**
- அயல்நாட்டு நாணயம்
- அரசிடம் உள்ள சிறப்பு எடுப்பு உரிமைகள் போன்ற வகைகளில் உள்ள ரிசர்வ் வங்கியின் சொத்துகள்

116. செலுத்தல் சம நிலைக்கும் வாணிபச் சம நிலைக்கு உள்ள வேறுபாடுகளை எழுதுக.

| வ.எண் | அடிப்படை | செலுத்துதல் சம நிலை | வாணிப சமநிலை |
|---|---|---|---|
| 1 | பொருள் | ”அறிக்கையளிக்கும் நாடுகளின் குடியிருபோர்களுக்கு இடையிலான குறிப்பிட்ட ஒரு காலத்திலான அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின் முறைப்படியான ஒரு அறிக்கையே குறிப்பிட்ட ஒரு காலத்திற்கான செலுத்துதல் நிலை ஆகும் | வாணிப சமநிலை என்பது ஒரு வருடத்தில் ஒரு நாட்டில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவினை குறிக்கிறது |
| 2 | நடவடிக்கைகளின் தன்மை | சரக்குகள் மற்றும் சேவைகளுடன் தொடர்புடையது | சரக்குகளுடன் மட்டும் |
| 3 | மூலதன நடவடிக்கைகளின் பதிவு | இது மூலதன நடவடிக்கைகளை பதிவு செய்கிறது | இது மூலதன நடவடிக்கைகளை பதிவு செய்வதில்லை |

| | | | |
|---|---|---|---|
| 4 | நிகர விளைவு | எப்பொழுதும் சமநிலை | சாதகம் அல்லது பாதகம் அல்லது சமநிலை |
| 5 | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்ள முடியும் | நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதில்லை |
| 6 | பாதகமான நிலையை சரிசெய்தல் | பாதகமான செலுத்துதல் சமநிலை பற்றாக்குறைக்கு வழிவகுக்கும் | பாதகமான வாணிப நிலையை சாதகமான செலுத்துதல் சமநிலையாக மாற்றலாம் |

117. வாணிபச் சமநிலையின் சிறப்புக்கூறுகளை விளக்குக

- வாணிப சமநிலை என்பது ஒரு வருடத்தில் ஒரு நாட்டில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவினை குறிக்கிறது
- சரக்குகளுடன் மட்டும் தொடர்புடையது
- இது மூலதன நடவடிக்கைகளை பதிவு செய்வதில்லை
- நடவடிக்கைகள் செலுத்துதல் சமநிலையின் நடப்பு கணக்கின் ஒரு பகுதியாகும்
- நிகர விளைவு சாதகம் அல்லது பாதகம் அல்லது சமநிலையில் இருக்கும்
- நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதில்லை
- பாதகமான வாணிப நிலையை சாதகமான செலுத்துதல் சமநிலையாக மாற்றலாம்

118. சட்டப்படி செல்லக்கூடிய ஒப்பந்தம் ஒன்றின் இன்றியமையாத கூறுகள் யாவை?

- முனைவும் ஏற்பும்
- சட்டப்படியான உறவு முறை இருத்தல் அவசியம்
- சட்டப்படியான மறுப்பயன் அவசியம்
- சட்டப்பூர்வமான நோக்கம் இருக்க வேண்டும்
- தன்னிச்சையான இசைவு அவசியம்

- ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களுக்கு ஒப்பந்த தகுதி அவசியம்
- ஒப்பந்தம் தெளிவாக இருக்க வேண்டும்
- ஒப்பந்தம் நிறைவேற்றும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும்
- சட்டத்தால் செயல்படுத்தும் திறன் கொண்டதாக ஒப்பந்தம் இருக்க வேண்டும்
- தேவையான சட்ட சடங்குகளை ஒப்பந்தம் பூர்த்தி செய்திருக்க வேண்டும்

119. ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

| வ.எண் | அடிப்படை | ஒப்பந்தம் | உடன்படிக்கை |
|---|---|---|---|
| 1 | பொருள் | சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் உடன்பாடிக்கை ஆகும் | உடன்பாடு என்பது மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதிமொழியும், உறுதிமொழிகளின் ஒவ்வொரு தொகுதியும் |
| 2 | செயலாக்கம் | அனைத்து ஒப்பந்தங்களையும் செயல்படுத்தமுடியும் | அனைத்து உறுதி மொழிகளையும் செயல்படுத்த முடியாது |
| 3 | பரஸ்பர உறவு | ஒப்பந்தம் என்பது உடன்படிக்கையை உள்ளடக்கியது | உடன்படிக்கையில் எல்லா ஒப்பந்தமும் உள்ளடங்க வில்லை |
| 4 | செல்லக்கூடியது | சட்டத்திற்கு உட்பட்ட உடன்படிக்கை மட்டுமே ஒப்பந்தம் ஆகும் | சட்டத்திற்கு உட்பட்ட அல்லது உடன்படாதவையும் உடன் படிக்கையாகும் |
| 5 | சட்டப்பூர்வமான கடமை | சட்டப்பூர்வமான கடமை உள்ளது | சட்டப்பூர்வமான கடமை கிடையாது |
| 6 | மறுபயன் | கட்டாயம் | கட்டாயமில்லை |
| 7 | பொறுப்பு | சட்டத்தின் | சமுகத்தின் அல்லது |

| | | | |
|---|---|---|---|
| | | அடிப்படையிலான பொறுப்பு | குடும்பத்தின்அடிப்படையிலான பொறுப்பு |

120. செல்லுபடியின் அடிப்படையில் ஒப்பந்தத்தின் வகைகளை விளக்குக?

1. செல்தகு ஒப்பந்தம்
   - ❖ சட்டத்தால் செயல்படுத்த கூடிய ஒப்பந்தக் செல்தகு ஒப்பந்தம் ஆகும்
2. செல்லாத ஒப்பந்தம்
   - ❖ சட்டத்தால் செயல்படுத்த முடியாத ஒப்பந்தக் செல்லாத ஒப்பந்தம் ஆகும்
   - ❖ செல்லக்கூடிய ஒப்பந்தத்தில் இன்றியமையாத கூறுகள் இதில் இல்லை
3. தவிர்தகு ஒப்பந்தம்
   - ❖ உடன்பாட்டில் ஈடுபட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் விருப்பப்படி ஆனால் மறுதரப்பினரின் விருப்பமின்றி நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கையே தவிர்தகு ஒப்பந்தம் ஆகும்
4. சட்டத்திற்கு முரணான ஒப்பந்தம்
   - ❖ இது சட்டத்திற்கு முரணான ஒப்பந்தம் ஆகும்
   - ❖ சட்டத்திற்கு முரணான ஒப்பந்தம் எல்லாம் செல்லாத ஒப்பந்தம் ஆகும்
5. நடைமுறைப்படுத்த முடியாத ஒப்பந்தம்
   - ❖ இது சட்டத்தால் செயல்படுத்த முடியாத குறைபாடுடைய ஒப்பந்தங்கள் ஆகும்

121. உருவாக்கம் அடிப்படையில் ஒப்பந்தத்தின் வகைகளை விளக்குக?

1. வெளிப்படை ஒப்பந்தம்
   - ❖ ஒப்பந்தத்தில் ஈடுபடுபவர்கள் அதன் நிபந்தனைகளையும் கூறுகளையும் ஏற்றுக்கொள்வதாக வெளிப்படையாக உடன்பட்டால் அது வெளிப்படை ஒப்பந்தம் ஆகும்
2. உட்கிடை ஒப்பந்தம்

- ❖ எழுத்து மூலம் இல்லாமல் ஈடுபடுபவர்களின் நடத்தை மூலம் ஏற்படும் ஒப்பந்தம் உட்கிடை ஒப்பந்தம் ஆகும்

3. போல்வு ஒப்பந்தம்/பகுதி அளவு ஒப்பந்தம்
   - ❖ இது சட்டத்தால் உருவாக்கப்படும் ஒப்பந்தம் ஆகும்
   - ❖ பொதுவாக இது ஒப்பந்தமே அல்ல
4. மறைமுக ஒப்பந்தம்
   - ❖ ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களின் நடத்தைகளையும் மற்றும் ஊகத்தின் அடிப்படையில் ஏற்படும் ஒப்பந்தம் மறைமுக ஒப்பந்தம் ஆகும்

122. நிறைவேற்றுதல் அடிப்படையில் ஒப்பந்தத்தின் வகைகளை விளக்குக?

1. நிறைவேறிய ஒப்பந்தம்
   - ❖ ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்கள் ஒப்பந்தப்படி அவரவர்களின் கடமையை முடிக்கும் போது அந்த ஒப்பந்தம் நிறைவேறிய ஒப்பந்தம் ஆகும்
2. நிறைவேற்றப்பட வேண்டிய ஒப்பந்தம்
   - ❖ ஒப்பந்தத்தில் ஈடுபட்டிருக்கும் இரு நபர்களிடையே கடமைகள் நிறைவேற்றாமல் இருந்தால் அது நிறைவேற்றப்பட வேண்டிய ஒப்பந்தம் ஆகும்
3. ஒரு தலை ஒப்பந்தம்
   - ❖ இதில் ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களில் ஒருவர் மட்டும் தனது வாக்குறுதியை அல்லது கடமையை நிறைவேற்றிய பிறகு மற்றொரு நபர் தனது கடமையை நிறைவேற்றுவார்.
4. இரு தலை ஒப்பந்தம்
   - ❖ ஒப்பந்தம் ஒன்று உருவாகும் பொழுது இரு தரப்பினரும் தங்கள் கடமையை ஆற்ற வேண்டியிருப்பின் அவை இரு தலை ஒப்பந்தம் ஆகும்

123. நிறைவேற்றதின் நேரமும்,காலமும் பற்றிய விதிகளை விளக்குக.

1. **நேரம் நிர்ணயிக்கப்படாமை பிரிவு 46**

- ❖ நிறைவேற்றுதற்குரிய நேரம் நிர்ணயிக்கப்படவில்லை எனில் ஒரு வாக்குறுதி அளித்தவர் ஒரு நியமான காலத்திற்குள் ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும்

2. **நிறைவேற்றதின் நேரமும்,காலமும் பிரிவு 47**
   - ❖ ஒப்பந்தங்களில் சில சமயங்களில் நிறைவேற்றுவதற்குரிய காலமும், இடமும் குறிப்பிட்டிருந்தும்
   - ❖ வாக்குறுதி பெற்றவர் அதை நிறைவேற்றுமாறு கேட்காமல் இருக்கிறார்
   - ❖ இந்த சமயத்தில் வாக்குறுதி அளித்தவர் தனது வாக்குறுதியை குறிப்பிட்ட நாளில் வணிக நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்

124. நிறைவேற்றதின் காலம் என்பது ஒரு முக்கிய காரணி என்ற விதியைக் கூறு.

1. **நிறைவேற்றதின் நேரமும்,காலமும் பிரிவு 47**
   - ❖ ஒப்பந்தங்களில் சில சமயங்களில் நிறைவேற்றுவதற்குரிய காலமும், இடமும் குறிப்பிட்டிருந்தும்
   - ❖ வாக்குறுதி பெற்றவர் அதை நிறைவேற்றுமாறு கேட்காமல் இருக்கிறார்
   - ❖ இந்த சமயத்தில் வாக்குறுதி அளித்தவர் தனது வாக்குறுதியை குறிப்பிட்ட நாளில் வணிக நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்

2. **நிறைவேற்றும் விதம் மற்றும் காலம் பிரிவு 50**
   - ❖ வாக்குறுதி பெற்றவர் நிறைவேற்றும் விதமும் காலமும் நிர்ணயித்து பிறகு அதன் படி ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும்

125. செலுத்துதல்களை ஒதுக்கி வைத்தல் எவ்வாறு நடைபெறுகிறது என்பதைக் கூறு.

1. **தீர்க்கப்பட வேண்டிய கடன் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் போது - பிரிவு 59**
   - ❖ குறிப்பிட்ட கடனை தீர்க்க தான் அனுப்பும் தொகையை பயன்படுத்துமாறு கடனாளி வேண்டுகோள் விடுக்க முடியும்

- ❖ அத்தொகையை கடன் அளித்தவர் ஏற்றுக்கொண்டார் அவர் அவ்வாறே அக்கடனை தீர்க்க பயன்படுத்த வேண்டும்

2. **தீர்க்கப்பட வேண்டிய கடன் சுட்டிக்காட்டாத பொ(ழுது பிரிவு 60**
   - ❖ கடனாளி அளித்த தொகை எந்த கடனை அடைக்க பயன்படுத்த வேண்டும் என்பதை சுட்டிக்காட்டாத போது கடன் அளித்தவரின் விருப்பத்திற்கு ஏற்ப அத்தொகையை பயன்படுத்திக் கொள்ளலாம்
3. **கடனாளி சுட்டிக்காட்டவும் கடனளித்தவர் ஒதுக்கீடு செய்யவும் தவறும் பொழுதும் பிரிவு 61**
   - ❖ ஒப்பந்த நபர்கள் எக்கடனுக்கும் என ஒதுக்கீடு செய்யவில்லை எனில் கால வரிசைப்படி முதன் முதலில் பெறப்பட்ட கடனை தீர்ப்பதற்கு பயன்படுத்தப்படும்
   - ❖ கடன் அனைத்தும் ஒரே நிலையில் இருந்தால் விகிதாச்சார அடிப்படையில் அவை தீர்க்கப்படும்

126. ஒப்பந்த விடுவிப்பு வழிகளை விளக்குக

1. நிறைவேற்றத்தின் மூலம் விடுவிப்பு

- ❖ ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் தமது கடமைகளை செய்தால் அது ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும்
- ❖ நிறைவேற்றம் உடன்பாட்டின் படி இருக்க வேண்டும்
- ❖ நிறைவேற்றம் இரு வகைப்படும்
- ➢ உண்மையான நிறைவேற்றம்
- ➢ நிறைவேற்றுவதாக முனைவு செய்தல்

2. இருதரப்பு உடன்படிக்கையின் மூலம் விடுவிப்பு

- ➢ வெளிப்படையான ஒப்புதல்
  - ❖ ஒப்பந்தத்தை உருவாக்கும் நேரத்திலோ அல்லது அதனை தொடர்ந்து அமைப்படும் நேரத்திலோ வெளிப்படையான ஒப்புதல் மூலம் ஒப்பந்தம் விடுவிக்கப்படலாம்
- ➢ உட்கிடையான ஒப்புதல்
  - ❖ ஒப்பந்தம் உட்கிடை ஒப்புதல் மூலமாகவும் விடுவிக்கப்படலாம்

3. இயலாது போதலால் விடுவிப்பு
    - சில நிகழ்சிகளால், ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்ற இயலாமல் போனால் அது இயலாது போதலால் விடுவிப்பு ஆகும்
    - இயலாது போதலால் விடுவிப்பு இரு வகைப்படும்
    - ❖ உடன்படிக்கையின் பொழுதே நிறைவேற்ற இயலாமை
    - ❖ ஒப்பந்தம் உருவாகிய பின்னர் ஏற்படும் இயலாமை

4. காலம் கடந்து போதலால் விடுவிப்பு
    - ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமல் இருந்து அதனால் பாதிக்கப்பட்ட நபர் குறிப்பிட்ட காலத்திற்குள் சட்ட நடவடிக்கை எடுக்காவிட்டல் ஒப்பந்தத்தை நிறைவேற்ற கோரும் உரிமையை இழந்து விடுகிறார்

5. சட்டத்தினால் விடுவிப்பு
    - சட்டத்தின் தலையீட்டினால் ஒப்பந்தம் ஒன்று விடுவிக்கப்படுவது ஆகும்
    - இது பின்வரும் ஏதேனும் ஒரு வழிகளில் நிகழலாம்
        - ❖ இறப்பு
        - ❖ இணைப்பு
        - ❖ நொடிப்பு நிலை
        - ❖ முக்கிய திருத்தம்

127. இழப்பீடு என்றால் என்ன?பல்வேறு வகையான இழப்பீடு யாவை?

- இழப்பீடு என்பது ஒப்பந்த மீறுகையால் பாதிக்கப்பட்ட நபர் அடைந்த நட்டத்தை ஈடுகட்டும் வகையில் தவறிழைத்த நபரால் அளிக்கப்படும் பணம் சார்ந்த ஈடு ஆகும்
- பாதிக்கப்பட்ட நபர் ஒப்பந்த மீறுகைக்கு காரணமான நபர் மீது இழப்பீடு பெறும் வகையில் சட்டநடவடிக்கை மேற்கொள்ளலாம்
- இழப்பீடு நான்கு வகைப்படும். அவை பின்வருமாறு
    - ❖ சாதாரண இழப்பீடுகள்
    - ❖ சிறப்பு இழப்பீடுகள்
    - ❖ பழிவாங்கும் தன்மையுள்ள அல்லது முன்மாதிரி இழப்பீடுகள்
    - ❖ பெயரளவு இழப்பீடுகள்

128. வருமான வரியின் ஐந்து சிறப்பு கூறுகளை விளக்கி எழுதுக.

1. அரசியலமைப்பின் படி விதிக்கப்படுகிறது
2. மத்திய அரசால் விதிக்கப்படுகிறது
3. நேர்முக வரி
4. ஆண்டு வரி
5. நபரின் மீது வரி விதிக்கப்படுகிறது
6. வருமானத்தின் மீது வரி கணக்கிடப்படுகிறது
7. குறிப்பிட்ட வீதத்தில் விதிக்கப்படுகிறது
8. முந்தைய ஆண்டின் வருமானம் மதிப்பீட்டு ஆண்டில் மதிப்பிடப்படுகிறது
9. மத்திய நேரடி வரிகள் வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது
10. இந்திய முழுவதும் பொருந்தும் தன்மையுடையது

129. வரி என்பதற்கு வரைவிலக்கணம் தந்து நேரடி மற்றும் மறைமுக வரியை உதாரணத்துடன் விளக்குக.

1. **வரி**
   - எந்த விதமான பயணையும் நேரடியாக திரும்ப பெறும் எதிர்ப்பார்ப்பற்ற அரசால் சுமத்தப்படும் ஓர் கட்டாய கட்டணமே வரியாகும்
   - மக்களால் அரசுக்கு அளிக்கப்படும் ஓர் கட்டாயக் கட்டணம் அல்லது பங்களிப்பே வரி ஆகும்

   A. **நேர்முக வரி**
      - நேர்முக வரி என்பது யார் மீது வரி விதிக்கப்படுகிறதோ அவரே வரியை செலுத்துவதாகும்
      - நேர்முக வரியில் வரித்தாக்கமும் வரி நிலைப்பாடும் ஒருவர் மீதே விழுகின்றது
      - **உதாரணம்**
        - வருமான வரி
        - நிறும வரி
        - சொத்து வரி
        - நன்கொடை வரி

- ❖ பண்னை வரி

B. **மறைமுக வரி**

- ➢ சரக்கு மற்றும் சேவை வழங்கும் விற்பனையாளர் மீது வரி விதிக்கப்பட்டு அவற்றை வாங்குபவரால் செலுத்தப்படும் வரி மறைமுக வரி ஆகும்
- ➢ உதாரணம்
  - ❖ சரக்கு மற்றும் சேவை வரி
  - ❖ சுங்க வரி
  - ❖ உற்பத்தி வரி

130. ஊதிய வருமானத்தில் இடம்பெறக் கூடிய பத்து வருமானங்களை வரிசைப்படுத்துக்க.

1. கூலி,
2. சம்பளம்
3. பென்சன்
4. பணிக்கொடை
5. சம்பளத்தை தவிர கூடுதலாக பெறப்படும் கழிவு, கட்டணம்
6. முன் கூட்டி பெறப்பட்ட சம்பளம்
7. ஈட்டிய முறையை பணிக்காலத்தில் பணமாக்குதல்
8. வருங்கால வைப்பு நிதி க்கு நிறுவன உரிமையாளரால் 12% அதிகமாக வழங்கப்பட்ட தொகை
9. பஞ்சப்படி
10. வீட்டு வாடகைப்படி

131. பல்வேறு வகையான மதிப்பீடு செய்யப்படும் நபர்களைப்பற்றி விவரி.

**மதிப்பீடிற்குரியவர்**

- ➢ பிரிவு 2(7) வருமான வரிச்சட்டம் 1961 இன் படி ”சட்டத்தின் கீழ் யாரால் வருமான வரி அல்லது ஏதேனும் பிற பணத்தொகை செலுத்தப்பட்டதாக உள்ளதோ அந்நபர் மதிப்பீடு செய்யப்படும் நபர் ஆவார்
- ➢ மதிப்பீடு செய்யப்படும் நபர் மூன்று வகைப்படும்

1. சாதாரண மதிப்பீட்டிற்குரியவர்

- வருமான வரி சட்டத்தின் கீழ் வரி, வட்டி, அபராதம் போன்ற ஏதேனும் ஒரு தொகையை செலுத்த வேண்டிய நபர் ஆவார்

2. பிரதிநிதித்துவ மதிப்பீட்டிற்குரியவர்
   - மற்றவரின் வருமானத்தின் மதிப்பீட்டிற்கு பொறுப்பேற்கும் ஒரு நபர் பிரதிநிதித்துவ மதிப்பீட்டிற்குரியவர் ஆவார்
   - உதாரணம் இளவர் ஒருவரின் பாதுகாவலர்
3. தவறிழைத்த மதிப்பீட்டிற்குரியவர்
   - வருமான வரி சட்டத்தின் கீழ் தமது கடமை ஏதேனும் நிறைவேற்ற தவறியவர் தவறிழைத்த மதிப்பீட்டிற்குரியவர்
   - தனது பணியாளர்களின் சம்பளத்திலிருந்து உரிய வரியை பிடித்தம் செய்யாமல் இருப்பவர்

132. நேரடி வரியையும் மறைமுக வரியையும் வேறுபடுத்துக

| வ.எண் | அடிப்படை | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|---|
| 1 | பொருள் | நேர்முக வரி என்பது யார் மீது வரி விதிக்கப்படுகிறதோ அவரே வரியை செலுத்துவதாகும் | சரக்கு மற்றும் சேவை வழங்கும் விற்பனையாளர் மீது வரி விதிக்கப்பட்டு அவற்றை வாங்குபவரால் செலுத்தப்படும் வரி மறைமுக வரி ஆகும் |
| 2 | இயல்பு | வளர்வீத வரி | பிற்போக்கு வரி |
| 3 | வரித்தாக்கம் | ஒரு நபரை சென்றடைகிறது | பல்வேறு நபர்கள் மீது விழுகின்றது |
| 4 | வரி ஏய்ப்பு | வரி ஏய்ப்புக்கான வாய்ப்பு அதிகம் | வரி ஏய்ப்புக்கான வாய்ப்பு குறைவு |
| 5 | பணவீக்கம் | பணவீக்கத்தை குறைக்கும் | பணவீக்கத்தை அதிகரிக்கும் |
| 6 | சுமை | மாற்ற முடியாது | மாற்ற முடியும் |
| 7 | விதித்தல் மற்றும் வசூலித்தல் | மதிப்பீட்டிற்குரியவர் மீது சுமத்தப்பட்டு வசூலிக்கப்படுகிறது | நுகர்வோர் மீது சுமத்தப்பட்டு மதிப்பீட்டிற்குரியவர்களால் செலுத்தப்படுகிறது |

133. சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகளை விளக்குக.

1. மத்திய சரக்கு மற்றும் விற்பனை வரி
   - மாநிலத்திற்குள் நடைபெறும் சரக்குகள் மற்றும் சேவைகள் மீது மத்திய அரசால் விதிக்கப்படும் வரியாகும்
2. மாநில சரக்கு மற்றும் விற்பனை வரி
   - மாநிலத்திற்குள் நடைபெறும் சரக்குகள் மற்றும் சேவைகள் மீது மாநில அரசால் விதிக்கப்படும் வரியாகும்
3. ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் விற்பனை வரி
   - மாநிலத்திற்கு இடையே நடைபெறும் சரக்குகள் மற்றும் சேவைகள் மீது மத்திய அரசால் விதிக்கப்படும் வரியாகும்
   - பின்பு மாநில அரசுகளுடன் பகிர்ந்து கொள்ளப்படுகிறது
4. யூனியன் பிரதேச சரக்கு மற்றும் விற்பனை வரி
   - இந்தியாவில் உள்ள யூனியன் பிரதேசங்களில் எல்லைக்குள் நடைபெறும் சரக்குகள் மற்றும் சேவைகள் மீது யூனியன் பிரதேசங்களால் விதிக்கப்படும் வரி ஆகும்

134. சரக்கு மற்றும் சேவை வரியின் நன்மைகள் விளக்குக.

1. GST வரிக்கு வரி விளைவை நீக்குகிறது
2. அனைத்து மாநிலங்களின் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பொருளாதாரத்தினை ஒன்றினைக்கிறது
3. இறக்குமதி சரக்குகள் மற்றும் இந்தியாவில் உற்பத்தி செய்த சரக்குகள் மாநிலத்திற்கிடையான வரி விதிப்பில் சமநிலையை கொண்டுவருகிறது
4. உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை ஊக்குவிக்கிறது
5. அதிக வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதன் மூலம் வறுமையை ஒழிக்கிறது
6. வரி இணக்கத்தினை அதிகரிக்கிறது. இதன் மூலம் அரசின் வருவாய அதிகரிக்கிறது
7. ஒழுங்குப்படுத்தப்படாத துறை GST கீழ் ஒழுங்குப்படுத்துகிறது
8. எளிய மற்றும் எளிதான ஆன்லைன் செயல்முறை
9. ரூ 20 லட்சம் விற்றுமுதல் வரை பதிவு செய்ய வேண்டியது இல்லை
10. ஒரு கோடி ரூபாய வரை விற்றுமுதல் உடைய நபர் தொகுப்பு திட்டத்தின் கீழ் பயன் பெற முடியும்

135. மத்திய, மாநில மற்றும் ஒருங்கிணைந்த சரக்கு மட்டும் சேவை வரிகளை வேறுபடுத்துக.

| அடிப்படை | CGST | SCST | IGST |
|---|---|---|---|
| பொருள் | மாநிலத்திற்குள் நடைபெறும் சரக்குகள் மற்றும் சேவைகள் மீது மத்திய அரசால் விதிக்கப்படும் வரியாகும் | மாநிலத்திற்குள் நடைபெறும் சரக்குகள் மற்றும் சேவைகள் மீது மாநில அரசால் விதிக்கப்படும் வரியாகும் | மாநிலத்திற்கு இடையே நடைபெறும் சரக்குகள் மற்றும் சேவைகள் மீது மத்திய அரசால் விதிக்கப்படும் வரியாகும் |
| வரி வசூலிப்பவர் | மத்திய அரசு | மாநில அரசு | மத்திய அரசு |
| பொருத்தல் | மாநிலத்திற்குள் நடைபெறும் அளிப்பு | மாநிலத்திற்குள் நடைபெறும் அளிப்பு | மாநிலத்திற்கு இடையே நடைபெறும் அளிப்பு |
| பதிவு செய்தலில் விலக்கு | விற்றுமுதல் ரூ20 லட்சம் வரை வடகிழக்கு மாநிலங்களுக்கு ரூ 10 லட்சம் வரை | விற்றுமுதல் ரூ20 லட்சம் வரை வடகிழக்கு மாநிலங்களுக்கு ரூ 10 லட்சம் வரை | பதிவு கட்டாயம் |
| தொகுப்பு திட்டம் | ஒரு கோடி ரூபாய வரை விற்றுமுதல் உடைய நபர் தொகுப்பு திட்டத்தின் கீழ் பயன் பெற முடியும் | ஒரு கோடி ரூபாய வரை விற்றுமுதல் உடைய நபர் தொகுப்பு திட்டத்தின் கீழ் பயன் பெற முடியும் | தொகுப்பு திட்டம் பொருந்தாது |